போன்றனவற்றிற்கு ஏற்ற மின்னொளியை அமைத்து
உரிய நேரத்தில் செய்வதற்கு உத்தரவாதமுடையவர்கள்.
அத்துடன்
வில்லியேஸ் ஜாப் B. S. A. போன்ற சகலவிதமான நீர் இறைக்கும்
இயந்திரங்களை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் செய்துகொடுப்பவர்கள்.
சி. முத்தையா நித்திலேட் நீர்வேலி.

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவை
வாழ்த்தும் திருவள்ளுவர் அச்சகத்தார்.

கலை அழகுமிளிரும்
கண்கவர் அச்சு
வேலைகளுக்கு

* * *
திருவள்ளுவர்
அச்சகம்

நல்லூர், யாழ்ப்பாணம்.

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள் !

செல்வத்துரைப்பத்தர் தங்கராஜா

# "சிவா ஜுவலர்"

கண்டி வீதி, — சாவகச்சேரி.

ஓடர் நகைகள்
உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்.

உத்தரவாதமுள்ள
அழகிய தங்கப்பவுண்
நகைகள் கிடைக்குமிடம்.

N. V. S. THANKARAJA

**SIVA JEWELLER**

CHAVAKACHCHERI.

**With best Complements from:**

# Yasotha Stores

**No. 58, Market, Chunnakam.**

Prop: S. MARUTHALINGAM

நீர்வேலி காமாட்சியம்பாள்
சனசமூக நிலைய வெள்ளி
விழாவிற்கு எங்கள்
இதயம் கனிந்த
வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

# எஸ். பி. எஸ். ஏஜென்சி

**உள்ளூர் விளைபொருள் கொமிஷன் விற்பனையாளர்கள்.**

113, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு 11.

தொலைபேசி: **26204**

குறைந்த செலவில்

நிறைந்த சேவை

பெற்று மகிழுங்கள்.

# செல்வம்

# ★ லொறி சேவை ★

நீர்வேலி.

உரிமையாளர் :

இ. செல்வநாயகம்

நீர்வேலி வடக்கு, — நீர்வேலி.

* *Hardware*
* *Brassware* and
* *Building Materials*

We carry regular stocks of :

OIL PAINTS, FRENCH POLISH, DISTEMPER, THINNER
CELLULOSE PAINTS, AUTOMOBILE ENAMELS
OIL CANVAS, MOTOR CARS AND UPHOLSTERY
MATERIALS, HOOD LINING AND HOUSEHOLD
ADHESIVE, ETC., ETC.

*

**Try once and convince yourself**

# S. M. YOOSUF & SONS

85, K. K. S. ROAD,

JAFFNA.

## நீர்வேலி, காமாட்சியம்பாள் சனசமூக நிலைய உறுப்பினர்கள் — 1975



இருப்பவர்கள் : (இடமிருந்து வலம்) கு. கனகசுந்தரம், ஆ. கந்தசாமி, இ. சுப்பிரமணியம், சி. அருந்தவநாதன், க. வல்லிபுரம், க. பத்மநாதன், த. பரராசசிங்கம், நா. சுப்பிரமணியம் நா. சின்னத்தம்பி.

நடுவரிசையில் நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்) வி. பாலகிருஷ்ணன், கு. செல்வராசா, மு. மகாலிங்கம், இ. பாலச்சந்திரன், மு. குணபாலசிங்கம், க. சற்குணம், க. பாலசிங்கம், க. கனகராசா, க. பாலசுந்தரம், இ. செல்வநாயகம், த. சண்முகதாஸ்

மேல்வரிசையில் நிற்பவர்கள் : (இடமிருந்து வலம்) செ. புவிபாலசிங்கம், கி. வயிரவநாதன், ச. சண்முகலிங்கம், மு. தேவராசா, சி. செல்லத்துரை, செ. தெய்வேந்திரம், க. சுந்தரலிங்கம், ந. ரவிநாதன், இ. ஜெயராசா.

கடந்த ஆண்டு விழாவில்
நடைபெற்ற
விநோத உடைப்போட்டியில்
பங்குபற்றியவர்கள்.





கடந்த ஆண்டுவிழாவில்
நடைபெற்ற
நடன நிகழ்ச்சியில்
கலந்துகொண்ட சிறுமியரும்
ஆசிரியையும்.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையம்

# வெள்ளி விழா நிர்வாகக் குழுவினர்

காப்பாளர்கள் : திரு. க. வல்லிபுரம்
திரு. சி. முத்தையா
திரு. ச. வடிவேலு

தலைவர்கள் : திரு. க. பத்மநாதன்
திரு. சி. அருந்தவநாதன்

உபதலைவர் : திரு. ஆ. கந்தசாமி

இணைச்செயலாளர்கள் :
திரு. செ. சுப்பிரமணியம்
திரு. த. பரராசசிங்கம்

பொருளாளர் : திரு. நா. சுப்பிரமணியம்

விளையாட்டுப் பகுதி : திரு. நா. சின்னத்தம்பி
திரு. கு. கனககந்தரம்

அறிவிப்பாளர் :
திரு. இ. பாலச்சந்திரன்

கலைப்பகுதி : திரு. செ. புவிபாலசிங்கம்
திரு. த. சண்முகதாஸ்
திரு. மு. தேவராசா

கண்காட்சி : திரு. வி. பாலகிருஷ்ணன்
திரு. க. கனகராசா
திரு. ச. சண்முகலிங்கம்
திரு. கி. வயிரவநாதன்

ஒலி அமைப்பாளர் :
திரு. க. புவனேஸ்வரன்

ஒளி அமைப்பாளர் :
திரு. மு. குணபாலசிங்கம்
திரு. ச. பாலசுந்தரம்
திரு. இ. செல்வநாயகம்

உறுப்பினர் குழு :

திரு. க. பாலசிங்கம்
திரு. க. சுந்தரலிங்கம்
திரு. கு. செல்வராசா
திரு. ந. ரவிநாதன்
திரு. மு. மகாலிங்கம்
திரு. சி. சிவகுருநாதன்
திரு. க. சற்குணம்
திரு. சி. செல்லத்துரை
திரு. செ. தெய்வேந்திரம்
திரு. இ. ஜெயராசா
திரு. பொ. சத்தியவானந்தராசா

வெள்ளி விழா மலர்க் குழுவினர் :

திரு. க. வல்லிபுரம்
திரு. க பத்மநாதன்
திரு. நா. சுப்பிரமணியம்
திரு. செ. துரைசிங்கம்
திரு. சி. அருந்தவநாதன்
திரு. செ. சுப்பிரமணியம்

# நினைவு கூருகிறோம்.

திரு. க. இராசையா
திரு. சி. தர்மலிங்கம்
திரு. தி செல்லையா
திரு. மூ. தம்பையா
திரு. மு. சபாரத்தினம்

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் வளர்ச்சியில் ஆரம்ப காலம் தொடக்கம் பல ஆண்டுகள் சேவை செய்த நிர்வாகிகளை, வெள்ளி விழாக் கொண்டாடும் இந் நேரத்தில் அவர்கள் இவ்வுலகில் இல்லாமைகண்டு, நன்றிக் கடன் செலுத்தும் நோக்குடன் அன்னார்களை நினைவு கூறுகிறோம்.

திரு. மு. கிருஷ்ணபிள்ளை

இந்நிலையத்தின் விழாக்களனைத்தையும் அமைப்புடன் கொண்டாடுவதற்கும் விளையாட்டுப் போட்டிகளை சிறப்பாக நடாத்துவதற்கும், விளையாட்டரங்கைத் தந்துதவிய திரு. மு. கிருஷ்ணபிள்ளை அவர்கள் எம்முன் இல்லாதமையால் அன்னாரையும் நினைவு கூருகிறோம்.

## அனுதாபப்படுகிறோம்.

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் ஆரம்பநாட் தொடக்கம் தனது பொதுநல சேவையை முன்வைத்து நிலைய வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட,

**திரு. வே. பாலசிங்கம் அவர்கள்**

பெரும் சுகவீனம் காரணமாகத் தனது அரும்பணியைத் தொடர்ந்து நிலையத்துக்கு அளிக்க முடியாதிருப்பதைக் கண்டு எமது நிலையத்தின் ஆழ்ந்த அனுதாபத்தை இவ்வெள்ளி விழாவின் போது நிலையத்தின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிலைய நிர்வாகிகள்

காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் கொண்டாடும்
வெள்ளி விழாவுக்கு எமது வாழ்த்துக்கள்.
வாழ்த்துபவர்கள்.

# தவபாலன் ரேணோர்ஸ்

கோப்பாய் சந்தி, கோப்பாய்.

எமது ஸ்தாபனத்தில் எந்தவிதமான
கடைச்சல் வேலைகளும்
குறித்த நேரத்தில் செய்துகொடுக்கப்படும்.

உரிமையாளர்: சி. தவபாலன்

---

வாழ்க ! வளர்க !! பல்லாண்டு !!!

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தை
வாழ்த்துபவர்கள்.

# ★ நியூ லங்கா லேற் ★

நீர்வேலி

புன்னாலைக்கட்டுவன்

உரிமையாளர் : N. கந்தசாமி

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்
வெள்ளி விழாவுக்கு எமது ஸ்தாபனத்தாரின் வாழ்த்துக்கள்
உரித்தாகுக.

# ராஜா பொடி பில்டேர்ஸ்

கண்டி ரேட், சாவகச்சேரி.

உரிமையாளர் : து. சின்னராசா

நீடூழி வாழ்க ! நீடூழி வாழ்க !!
நீர்வேலிக் காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தை
வாழ்த்துபவர்கள்.

# விஸ்வலிங்கம் மரக்காலை

கண்டி ரேட், சாவகச்சேரி.

உரிமையாளர் : வ. விசுவலிங்கம்

நீர்வேலி காமயட்சியம்பாள் சனசமூக நிலையம் கொண்டாடும்
வெள்ளி விழாவுக்கு எமது நல்வாழ்த்துக்கள் !

புவிநாதன்
உழவுயந்திர சேவை

நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

---

காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் வாழ்க, வளர்க
பல்லாண்டு என வாழ்த்துபவர்கள்.

ஸ்ரீ ஆனந்தா
ரான்ஸ்போர்ட்
சிறுப்பிட்டி

உரிமையாளர் : V. வல்லிபுரம்

காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் கொண்டாடும்
வெள்ளி விழாவுக்கு எமது ஸ்தாபனத்தின்
நல்வாழ்த்துக்கள்.

# அம்பாள்
# பொடிபில்டேர்ஸ்

கண்டி ரோட், சாவகச்சேரி

உரிமையாளர்: K. வீரவாகு அன் சன்ஸ்

---

வாழ்க! வளர்க!!

நீர்வேலிக் காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தை
வாழ்த்துபவர்கள்.

# "சிவசம்பு கரேச்"

கச்சாய் ரோட், சாவகச்சேரி.

உரிமையாளர்: க. சிவசம்பு

# காமாட்சியம்பாள் சனசமூக நிலைய இயக்குனர்கள்

## 1975



க. வல்லிபுரம்
(முதல் தலைவரும்,
இன்னாள் காப்பாளரும்)



க. பத்மநாதன்
(காப்பாளரும்,
வெள்ளிவிழாக் குழுத் தலைவரும்)



சி. அருந்தவநாதன்
(தலைவர்)



ஆ. கந்தசாமி
(உப தலைவர்)



செ. சுப்பிரமணியம்
(செயலாளர்)



த. பரராசசிங்கம்
(செயலாளர்)



நா. சுப்பிரமணியம்
(பொருளாளர்)



கு. கனகசுந்தரம்
(விளையாட்டுத்துறைத் தலைவர்)



நா. சின்னத்தம்பி
(விளையாட்டுத்துறைத் தலைவர்)



வி. பாலகிருஷ்ணன்
(நூலகப் பொறுப்பாளர்)



த. சண்முகதாஸ்
(நூலகப் பொறுப்பாளர்)



மு. தேவராசா
(கலாச்சாரப் பகுதிப் பொறுப்பாளர்)

நீர்வேலி, காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்

# இருபத்தைந்தாண்டு நிர்வாக சபையில் ...

| ஆண்டு | தலைவர் | உபதலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|---|
| 1950 — 1953 | க. வல்லிபுரம் | க. இராசையா | ச. வடிவேலு | சி. முத்துக்குமாரு |
| 1954 | கு. இராசரத்தினம் | க. விநாயகமூர்த்தி | க. இராசரத்தினம் | மு. மயில்வாகனம் |
| 1955 | க. வல்லிபுரம் | க. இராசையா | ச. வடிவேலு | மு. மயில்வாகனம் |
| 1956 | க. வல்லிபுரம் | க. இராசையா | க. பத்மநாதன் | வ. நல்லையா |
| 1957 — 1959 | க. வல்லிபுரம் | மு. சபாரத்தினம் | க. பத்மநாதன் | வ. நல்லையா |
| 1960 — 1961 | க. வல்லிபுரம் | வ. செல்லத்துரை | க. பத்மநாதன் | சி. அருந்தவநாதன் |
| 1962 — 1971 | க. வல்லிபுரம் | அ. சுப்பிரமணியம் | க பத்மநாதன் | சி அருந்தவநாதன் |
| 1972 — 1974 | க. பத்மநாதன் | சி. அருந்தவநாதன் | செ. சுப்பிரமணியம்<br>த. பரராசசிங்கம் | நா. சுப்பிரமணியம் |
| 1975 | சி. அருந்தவநாதன் | ஆ. கந்தசாமி | செ. சுப்பிரமணியம்<br>த. பரராசசிங்கம் | நா. சுப்பிரமணியம் |

## காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் விழாவின்போது

## தங்கப்பதக்கங்களும், வெற்றிக் கேடயங்களும், வெற்றிக் கிண்ணங்களும் அன்பளிப்புச் செய்தோர்.

1 காமாட்சியம்பாள் ஐக்கிய கைத்தொழிற் சங்கம், நீர்வேலி

2. அத்தியார் ஞாபகார்த்தக் கேடயம்,
நீர்வேலி வடக்கு ப. நோ. கூ. சங்கம்

3. K. V. கனகரத்தினம் ஞாபகார்த்தக் கேடயம்,
ஹரன் ஜுவல்லர்ஸ், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

4. S. செல்லையா ஞாபகார்த்தக் கேடயம்,
S. விஸ்வலிங்கம் சகோதரர்கள், நீர்வேலி

5 சின்னத்தம்பி ஞாபகார்த்தக் கேடயம்,
அண்ணா ச. ச. நிலையம், சிறுப்பிட்டி, நீர்வேலி

6 க. சின்னத்தம்பி, ஸ்ரீ முருகன் சோடா, நீர்வேலி

7. க. வல்லிபுரம்,
முகாமையாளர்; காமாட்சியம்பாள் ஐ. கை. சங்கம், நீர்வேலி

8. மில்க்வைற் சோப் ஸ்தாபனம், யாழ்ப்பாணம்.

9. அ. சுப்பிரமணியம் அரிவு மில், நீர்வேலி

10. ஆ. கந்தசாமி நீர்வேலி

11. செ. வீரசிங்கம் நீர்வேலி

12. M. K. கணபதிப்பிள்ளை C. T. B. நீர்வேலி

13. பொ. பஞ்சநாதன் மாசுவன், நீர்வேலி

14. K. இராசரத்தினம் (அதிபர்) நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி

15. சு. தர்மலிங்கம் நீர்வேலி

16. அ. கந்தையா ஸ்ரீ குமரன் மில், நீர்வேலி

17. சி. செல்வராசா ஏழாலை

18. காமாட்சியம்பாள் இளைஞர் விளையாட்டுக் கழகம், நீர்வேலி

## தங்கப்பதக்கங்கள் அன்பளிப்புச் செய்தோர்

* ஆறுமுகம் அன் கம்பனி, 107, 4-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.
* இ. பஞ்சாட்சரம் நகை மாளிகை, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
* ராஜ்மணி இரும்புத் தொழிற்சாலை, குறுக்கு றேட், நீர்வேலி.

காமாட்சியம்பாள் சனமூக நிலையத்தின்
வெள்ளிவிழாவை வாழ்த்துகிறோம் !

ருசிமிக்க சுகாதார முறையில் தயாரிக்கப்பட்ட

றெ
யா
சி
னி

★ ஐஸ்பழம்
★ ஐஸ்கிறீம்
★ ஐஸ்சொக்ஸ்

மற்றும்
குளிர்பானங்களும், சிற்றுண்டி வகைகளும்
எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம்.

# றெயாசினி கிறீம் கவுஸ்
&
# ஜெயமினி பேக்கறி

இருபாலைச் சந்தி.

உரிமையாளர் : S. M. லியனகே
අයිතිකරුවා : ඇස්. ඇම්. ලියනගේ

*Space Donated by:*

# INDRABAWAN COOL BAR

**K. K. S. Road** **Chunnakam.**

Prop : S. Sundaram

அழகிய தங்கப் பவுண் நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்



# கே. டி. எம். ஜுவல்லர்ஸ்

**நகை வைர வியாபாரம்**

**67, கன்னாதிட்டி,** **யாழ்ப்பாணம்.**

காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் கொண்டாடும்

வெள்ளி விழாவுக்கு நல்லாசிகள் !

## உங்கள் மோட்டார் வாகனங்கள்

எதுவானாலும் சிறந்த முறையில்

## ரிங்கர் வேலை செய்துகொள்ள

இன்றே விஜயம் செய்யுங்கள்.

# வினாயகர் ரிங்கர் கரேச்

நீர்வேலி.

உரிமையாளர்: நா. குமாரசாமி

வெள்ளி விழாவிற்கு நல்லாசிகள் !



# முருகன் பலசரக்கு மாளிகை

உங்களுக்குத் தேவையான

சகலவிதமான

சாய்ப்புச் சாமான்களும்

பலசரக்கு வகைகளும்

மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

இன்றே விஜயம் செய்யுங்கள்.

—* முருகன் பலசரக்கு மாளிகை *—

பருத்தித்துறை ரோட்,

சிறுப்பிட்டி.

உரிமையாளர் : பொ. கனகநாயகம்

# பண்பாட்டின் பண்பு பகரும் பண்டைய சிற்பக்கலை

கலாகேசரி ஆ. தம்பித்துரை
*(வடமாநிலச் சித்திரக் கல்வி அதிகாரி)*

அழகுக் கலைகள் மனிதனுடைய ஆழ்ந்த உள்ளத்தில் நின்று எழுகின்ற ஒருவகை உணர்ச்சியின் எழுச்சியால் தோன்றுகின்றன. ஆத்ம நலன்களைக் கருதி இக்கலைகளை மனிதன் நாடியிராவிட்டால் சீரிய நாகரிகத்தின் ஒளியை அவன் கண்டிருக்க மாட்டான். பண்டைய நாகரிகத்திற் சிறந்து, பண்பான கலாச்சாரத்தில் பொலிந்து மிளிர்கின்ற பாரதமும், கிரேக்கமும் முறையே கீழைத்தேச கலை உயர்ச்சிக்கும் மேலைத்தேச கலை வளர்ச்சிக்கும் ஊற்றுக்களாகத் திகழ்கின்றன. கலைக் களஞ்சியங்களான இவ்விரு தேசங்களின் தலையாய கலையாக விளங்குவது சிற்பக் கலையேயாகும்.

மனிதன் தனது அகவுணர்ச்சிகளைப் பொன், [வெண்கலம் போன்ற உலோகங்களினாலும், மரம், கல், களிமண் போன்ற பொருட்களினாலும் உருவகப்படுத்துங் கலையே சிற்பம் எனப்படும். ஒருவனது கருத்தை அல்லது உணர்ச்சியை இசைக் கலையிலே ஒலி தெரிவிக்கின்றது. அது போற் சிற்பத்தில் வடிவம் அவற்றை வெளிப்படுத்துகின்றது. ஏழு இசைகளின் மடக்கங்களினால் இனிய பண்களோடு கூடிய இசைக்கலை அமைவதுபோலக் கோடுகளின் மடக்கங்களினால் சிற்ப வடிவங்கள் அழகுடன் அமைகின்றன. இசையின் இனிமைக்கு ஓசையின் மடக்கங்களின் மூலம் ஊற்றெடுக்கும் சந்தப் பெருக்கு எவ்வகையில் இன்றியமையாததோ அவ்வண்ணம் சிற்பத்தின் சிறப்புக்குக் கோடுகளின் மடக்கங்களினால் உதயமாகும் லளித ஓட்டமும் அவசியமாகும். இந்த லளிதப் பெருக்கை நடனம், சிற்பம், ஓவியம் போன்ற கவின் கலைகளிலே உருவங்களின் உடலசைவு, கரங்களின் அமைப்பு, அவற்றின் முத்திரைகள் ஆகியவைகளின் மூலம் கலைஞர்கள் காண்பிக்கின்றனர். இத்தன்மையில் நடனம், சிற்பம், ஓவியம் ஆகிய நளினக் கலைகள் ஒன்றுடனென்று ஒன்றியிணைந்து செயற்படுகின்றன. இதனாற் போலும் விஷ்ணுதர் மோர்த்திரர் என்னும் சிற்பநூல் வல்லுனர் ''நிருத்தம் சித்திரம், பரம் சித்திரம் மடம்'' என்று: அழகாகக் கூறிப்போந்தார். அதாவது சிற்பமும் ஓவியமும் நடனக் கலையின் மற்றோர் விதம் என்பதாகும். இக்கருத்தையே

> ''நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> வோவியச் செந்நூ லுரைநூற்
> கிடக்கையும்''

என்னும் மணிமேகலை அடிகள் வலியுறுத்துகின்றன. மேலும் ''சித்திரம்'' என்னும் சொல் சிற்பக் கலையையும் குறிக்கின்னது. கற்களிலோ மரத்திலோ உருத் தோன்றுமாறு குறைப்புடைப்புச் சிற்பமாக (Carving Relief) செதுக்கப்படும் சிற்பத்தை அர்த்த சித்திரம் என்பர். ஓவியம். சிற்பம் போன்றது என்பதை மட்டும் குறிப்பதற்காக ஓவியக் கலைக்குச் சித்திரா பாஸம் என்ற பெயரையும் பண்டைய பாரதநாட்டுக் கலைப் பேரறிஞர்கள் அளித்திருக்கின்றார்கள்.

லளிதக் கலையான சிற்பக்கலை உருவங்களை அமைக்கும் முறையையொட்டிப் பல வகைப் பிரிவுகளாக கலைஞர்களினால் வகுக்கப்பட்டிருக்கின்றது. சிற்ப வடிவத்தின் முழு உருவமும் தெரிய அமைக்கப்படும் சிற்பங்கள் முழு உருவச் சிற்பங்கள் அல்லது சிலாவடிவங்கள் எனப்படும். ஆலயங்களில் உள்ள தெய்வப் படிமங்கள் இவ்வகையைச்

சார்ந்தன. வடிவத்தின் ஒருபக்கத் தோற்றத்தை மட்டும் காட்டும் சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் (Bas Relief) ஆகும். புடைப்புச் சிற்பத்தில் வடிவம் மேற்பரப்பில் நின்றும் உயரமாகப் பிதுங்கி நிற்கும். மேற்பரப்பைக் குடைந்து, வடிவம் அதனிலும் தாழ்ந்திருக்கும்படியாகச் செதுக்கப்படும் சிற்பம் குடைவுச் சிற்பம் என்று அழைக்கப்படும். இது புடைப்புச் சிற்ப முறைக்கு நேர்மாறானது. சிற்பத்தின் பயனை நோக்கியும் சிற்ப உருவங்களைப் பாகுபடுத்துவர். கட்டடங்களை அலங்கரிப்பதற்காக அமைக்கப்படும் சிற்பங்கள் அலங்காரச் சிற்பங்களாகும். கோயில்களிலும் அரண்மனைகளிலும் பரந்து காணப்படும் புடைப்புச் சிற்பங்கள் அநேகமாக இந்த வகுப்பைச் சார்ந்தன. கட்டடம் போன்ற வேறோர் அமைப்பைச் சாராமல், தனித்து நிற்கும் சிற்பத்தை தனிச் சிற்பம் என்றும், ஒரு நிகழ்ச்சியின் அல்லது ஒரு பெரியாரின் நினைவாக அமைக்கப்படும் சிற்பம் நினைவுச் சிற்பம் எனவும் கருதப்படும். ஒரு குறிப்பிட்டவரின் உருவத்தை உள்ளது உள்ளவாறு காட்டும் நினைவுச் சிற்பம் உருவச்சிலை (Portrait Sculpture) என அழைக்கப்படும்.

சிற்பக்கலை காலத்தையொட்டி வளருங் கலையாகும். காலத்திற்குக்காலம், தேசத்திற்குத்தேசம், இடத்துக்கிடம் அதன் நோக்கங்களும் தன்மைகளும் மாறுபடுகின்றன. இம்மாறுபாடுகளுக்கேற்பப் பல மரபுகள் தோன்றுவதுண்டு. கிரேக்கர் தம் சிற்ப மரபுக்கும் இந்திய மரபுக்கும் நோக்கங்களையும், கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்ட பரந்த மரபு வேறுபாடு நோக்கற்பாலது. கிரேக்கர் எழுச்சி மிக்கவர்கள்; மனித இனத்தையே ஆராய நாட்டங் கொண்டவர்கள். இயற்கைச் சத்திகளை மனிதவடிவில் கடவுள்களாக வடித்து வழிபட்டனர். உடல் அசைவுகளை, உறுப்பு நெளிவுகளை, அகவுணர்ச்சிகளை. கட்டான உடலின் வனப்பை, உடற்கூற்று விளக்கங்களை உள்ளது உள்ளவாறு காட்டும் தன்மை கிரேக்க சிற்பிகளிடத்தில் தன்னிகரற்று விளங்கியது. ஆனால், பண்பாட்டின் அடிப்படையில் முற்றிலும் வேறுபட்டு நின்ற பாரத நாட்டுச் சிற்பிகளின் உடலுறுப்பு இலக்கணத்தினின்றும் வேற்றுமைப்படுவனவாம். முழுமுதற் கடவுளின் திருவுருவிலே பல உயிர்களும், பல உலகங்களும் படிந்து இயங்குகின்ற தோற்றத்தைத் தியானிக்கும் பண்பான பாரத நாட்டுச் சிற்பி மனித சக்திக்கு அப்பாற்பட்ட பரம்பொருளை உருவகப்படுத்தி அமைக்கும்போது இயற்கை மனிதனைப் போலல்லாமல் ஆயிரந் தலைகளும், ஆயிரம் கண்களும், ஆயிரம் அடிகளும், ஆயிரம் கைகளுமுடைய மூல புருடனைப் பாடுகின்ற வேதவாக்கியங்களுக்கு அமைய அமைத்துள்ளான். இந்திய சிற்பி ஒரு குரவனாகவும், புலவனாகவும் விளங்குகிறான். கடவுள் எங்கும் வியாபகமாகத் திகழ்கின்றார் என்னும் கோட்பாட்டுக்கிணங்கத் தெய்வப் படிமங்களை நான்கு அல்லது எட்டுக் கைகளுடன் இந்தியக் கலைஞர்கள் உருவகப்படுத்தியுள்ளனர். இந்திய சிற்பம் கற்பிதமுடையதும் (Idealistic) கூடார்த்தமுடையதும் (Mystic) குறியீட்டுத் தன்மையுடையதும் (Symbolic) பரஞானத்துவம் (Transedental) உடையதுமாகும். இந்தியச் சிற்பங்களின் உடலமைவு சாத்விகத் தன்மை பொருந்தியதாகவே காட்டப்படுகின்றது.

இத்தகைய தன்மைகளுக்கமைய கண்ணையும், கருத்தையும் கவர்ந்து மனதுக்கு இன்பமளிக்கும் சிற்பக்கலையைப் பண்டைத்தமிழ் மக்கள் திறம்பட வளர்த்து வந்திருக்கின்றனர். இந்த உண்மை சிற்ப வடிவங்களை வடிப்பதற்கு இன்ன இன்ன பொருட்கள் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றதென்று;

கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத்தொழிற் குறுப்பாவன

என்னும் திவாசர நிகண்டுப் பாடல்மூலமும்

மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்
கண்ணிய தெய்வங் காட்டுநர் வகுக்க

என்னும் மணிமேகலை அடிகள் வாயிலாகவும் நமது பழம்பெரும் கோயில்களிற் காணப்படும் சிற்பச் செல்வங்கள் மூலமும் அறியக் கிடக்கின்றது. தமிழ்நாட்டுக் கோயில்கள் அழகிய சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய விமானங்களுடனும் கோபுரங்களுடனும் கி. பி. இரண்டாம் மூன்றாம் நூற்றாண்டளவிற் சிறப்புடன் மிளிர்ந்தனவென்று இலக்கியச் சான்றுகள் பகர்கின்றன. அக்காலத்துக் கோபுரங்கள் செங்கற்களினாலும்,

அவன் செயலை ஏற்றுக்கொள்ளவில்லை, தன் கணவனும், பாண்டிநாட்டு மக்களும் தாழ்வுற்று வழிதவறிச் செல்வதை அவ சகிக்கமுடியவில்லை. மாற்றுத் திட்டமொன்று தீட்டிச் சம்பந்தப்பெருமானின் உதவியுடன் நாட்டையும் மன்னனையும் நேர்வழியிற் செல்லும்படி செய்துவிட்டார். அதனால் ''மங்கையர்க்கு தனியரசி எங்கள் தெய்வம் .. (தென்னர் குலப்) பழிதீர்த்த தெய்வப்பாவை'' என்று பெரியபுராணத்திற் பாராட்டப்படுகின்றார். இவை கடந்தகால நிகழ்ச்சிகள் எனினும் பெண்மையின் ஆற்றலுக்கும், பொறுப்புணர்ச்சிக்கும் முக்கிய எடுத்துக் காட்டுக்களாகும்.

இன்றைய நிலையிலும் இத்தகைய உதாரணங்கள் சிலவுள. பெண்கள் ஓரளவு விழிப்புணர்ச்சி பெற்றுச் சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் ஆண்களோடு சரிநிகர் சமானமான பகுதிகளை வகித்து வருகிறார்கள். சிக்கல் நிறைந்த அரசியற்றுறையிற்கூட மூன்று பெண்மணிகள் பிரதமர் பதவியேற்றுத் தலைமை தாங்கித் தங்கள் பணியைச் சிறப்புடன் செய்து வருவது பெண்ணினத்திற்குப் பெருமையளிப்பதாகும். எனினும் சில குறைபாடுகளும் காணப்படாமலில்லை. பெண்களின் தலைமையையோ, அவர்களின் சேவையையோ சமுதாயம் முழு மனத்துடன் அங்கீகரித்து, ஆடவர்களுக்கும் அவர்களுக்கும் எவ்வித பாகுபாடுங்காட்டாது, அவர்களை மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கிறதென்று கூறமுடியவில்லை; ஒரு குடும்பத்தில் பெண் குழந்தையொன்று பிறக்கும்போது ஆண் குழந்தை பிறக்கும்போதுள்ள குதூகலவுணர்வு காட்டப்படுவதில்லை, இவற்றின் மூலம் நாம் காண்பதென்ன? பெண்மை தனக்குள்ள மதிப்பையும் உரிமையையும் இன்னும் பூரணமாகப் பெறவில்லையென்பதேயாம். நமது நாட்டில் மாத்திரமன்றி உலகின் பல பாகங்களிலும் இக் குறைபாடுண்டு. அதனாலேயே, பெண்களின் நிலையை உயர்த்த அவர்களின் தேவைகளை நிறைவேற்ற, மகளிர் ஆண்டு பிரகடனப் படுத்தப்படவேண்டியதாயிற்று.

பெண்களின் உயர்ச்சி பிறருடைய உதவியில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை. தங்கள் பண்பாட்டையும் கல்வியறிவையும் வளர்த்துக் கொள்வதாலும், கடினமான உழைப்பினை மேற்கொண்டு தமது தாழ்வைத் தாமே நடத்த முன்வருவதாலும், சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய கடமைகளை நல்வழியிற் திட்டமிட்டுச் செய்வதாலும் பெண்கள் தங்கள் நிலையை உயர்த்தமுடியும்.

இன்று நம் பெண் சமூகத்தில் இருவித குறைபாடுகள் காணப்படுகின்றன. ஒன்று, நெடுங்காலப் பழக்கத்தினால் ஒதுங்கிக்கிடந்த பெண்கள், மேலும் அப்படி மூலையில் முடங்கிக் கிடப்பதே தருமமென்று தப்பாகக் கருதுகிறார்கள். மற்றது. விழிப்புணர்வுடன் சமூகப் பணிகளிற் கால்வைத்த பெண்கள் நித்திரை மயக்கத்தில் நடப்பவர்கள் போல வழி தப்பிச்சென்று புதிய பிரச்சினைகளுக்கு ஆளாகி விடுகிறார்கள். இவ்விரு முனைப்பட்ட பிழைகளும் தவிர்க்கப்பட வேண்டுமானால் ஆடவர்களுக்குப் போலவே பெண்களுக்கும் ஆழ்ந்து அகன்ற கல்வியறிவும் மனவுறுதியும் வேண்டும். 'குப்பையில் எறிந்தாலும் குன்றிமணி நிறங் கெடாதது போல' எந்தக் கொடிய சூழலிலும் தன்னற்பண்புகள் கெடாதபடி பெண்மை தன்னைத் தயார் செய்தல் வேண்டும். இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது உரையொன்றில் சுட்டிக்காட்டியபடி, 'பெண்கள் சமூகப்பணிகளைச் செய்வதென்றால், தமது பெண்மையையும் மென்மையையும் கற்பொழுக்கத்தையும் கைவிட்டு அலைந்து திரிவதென்ற அர்த்தமாகாது. ஆண்களுக்குச் சரிநிகர் சமானமாதல் என்பதன் பொருள், எல்லாவாய்ப்புக்களையும் அவர்களுக்குச் சமமாகப் பெற்றுத் தன் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் அடக்கமாகவும் உறுதியாகவும் பணி புரிதல் என்பதேயாகும்.

நமது நாட்டில், அரசியற்றுறையிலும் சமூகத் துறையிலும், பெண்கள் அரும்பணியாற்றுதல் அவசியமாகும். உலகின் மற்றப்பாகங்களிற் காணப்படாத ஒரு பெருங்குறை நம் நாட்டில் உருவாகி வளர்ந்து வருகிறது. அதாவது நம் மக்களிடம் இனவுணர்ச்சியும் இல்லை. தேசியவுணர்வும் இல்லை. வருங்கால சமுதாயம் மனிதகுல ஒருமைப்பாட்டிற் கட்டியெ

லுப்பப்பட வேண்டும். வேற்றுமை விதைகளை மக்கள் மனதிற் பதிக்காமல் ஒன்றுபட்ட கிராம சமுதாயங்களையும் அதன் மூலம் நற்பண்புவாய்ந்த நாட்டின் பிரசைகளையும் உருவாக்குதல் அவசியம். தூர திருஷ்டி வாய்ந்த, நீதியும், நேர்மையும் கொண்ட பெண்மணிகள் இப்பணியை மேற்கொள்ளலாம்.

சமூகத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வு ஒரு பெருஞ் சாபக்கேடாகும். இவ் வேற்றத்தாழ்விஞல் சீதனக் கொடுமை என்ற பெயரில் அதிகம் துன்புறுத்தப் படுவோர் பெண்களேயாவார். கடின உழைப்பாலும், ஆடம்பரமற்ற வாழ்க்கை முறையாலும் ஏற்றத்தாழ்வுகளைப் போக்கிவிட முயலாமல், பெண்கள் இன்னமும் ஆடம்பரம் நிறைந்த நவநாகரிகப் பொம்மைகளாய்ச் சோம்பலுற்று வண்ணத்துப் பூச்சிகள்போல் உலகில் நடமாட விரும்புவது கேலிக்கிடமானது. ''ஆடம்பரம் நிறைந்த பெண்கள் ஆடவர்களின் கழுத்திற் கட்டப்பட்ட அம்மிக் கல்லுக்குச் சமமானவர்கள்'' என ஒரு பெரியார் குறிப்பிட்டது கவனிக்கத்தக்கது. ஆண்களோடு சரிநிகரா உத்தியோகங்களில் மாத்திரமன்றி, விவசாயம், கைத்தொழில் முதலிய ஏனைய துறைகளிலும் பெண்கள் முன்னின்று உழைத்தல் வேண்டும். இங்ஙனம் செய்வதால் பெண்கள் பலவீனர்கள், மற்றவர்களின் பராமரிப்பில் தங்கி வாழுபவர் என்ற எண்ணத்தைப் போக்கிவிட முடியும்.

சமுதாயத்தில் பின்தங்கி வாழும் ஏழைகளையும் பலவீனர்களையும் பாதுகாத்தல், நோயாளர்களைப் பேணுதல், விதவைகள், அநாதைகள் இல்லங்களை நடாத்துதல் போன்ற பொதுப்பணிகளைச் செய்வதற்கு மாதர் நல இயக்கங்கள் முன்வந்து ஒன்றுபட்டுப் பணிபுரிதல் அவசியமாகும். தியாகவுணர்வுடன் தன்னலமற்ற சேவை புரிவதில் மேல் நாட்டுப் பெண்மணிகள் பலரும் நமக்கு வழிகாட்டிகளாகத் திகழுகின்றூர்கள். அவர்களுடைய வரலாறுகளையும் நமது பெண்கள் முன்மாதிரியாகக் கொள்ளுதல் நன்று.

முடிவில், பெண்கள் உணரவேண்டிய முக்கிய உண்மையொன்றினைக் குறிப்பிடல் அவசியம். உண்பது, உறங்குவது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கியமான காரியம் தான் பிறந்த குடும்பத்துக்கும், நாட்டுக்கும், இயலுமாஞல் உலகுக்கும் பணியாற்றுதல் என்பது. சமூகப் பணிகளை ஆடவர்கள் தனித்துச் செய்வதால் மாத்திரம் முழுமை பெறவியலாது. பணிகளின் தன்மைகளைப் புரிந்துகொண்டு பெண்களும் தர்மீக அடிப்படையில் ஒத்துழைத்துத் தம்மாலான காரியங்களைச் செய்வதால் குடும்பங்கள் செழிக்கும்; நாடு செழிக்கும்; உலகில் சமாதானமும் மகிழ்ச்சியும் நிலவும்.

வெள்ளிவிழாவிற்கு எமது நல்வாழ்த்துக்கள் !

# சசிதரன் தேனீர்ச்சாலை

★ சுவைமிகு
சூடான பானங்கள்



★ தித்திக்கும் சிற்றுண்டிகள்

★ தரம்மிக்க உணவுகள்

சசிதரன் தேனீர்ச்சாலை
நீர்வேலிச் சந்தி.

உரிமையாளர் : எஸ். நடராசா

வெள்ளிவிழா எடுக்கும் காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்திற்கு

எமது நல்லாசிகள்!

— o —

இலங்கையின் தரம்மிக்க

காமினி, வைர மார்க், கல்யாணி, குத்துவிளக்கு

ஓடுகளுக்கும்,

ஏனைய ரக ஓடுகளுக்கும்

விற்பனையாளர்கள்

# ருஜினி ஸ்ரோர்ஸ்

20, மூன்றாம் குறுக்கு வீதி,

**யாழ்ப்பாணம்.**

கிளை :

ருஜினி ஸ்ரோர்ஸ்

கண்டி வீதி, — கைதடி.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்
வெள்ளி விழாவிற்கு
எமது இதயபூர்வமான நல்லாசிகள்.

உள்ளூர் விளைபொருள்
கொமிஷன் விற்பனையாளர்கள்.

# என். ஏ. வர்ணகுலசிங்கம்

கொமிஷன் ஏஜன்ட்

நம். 173, கெய்சர் வீதி, கொழும்பு - 11.

வெள்ளி விழாக்காணும் நீர்வேலி
காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்திற்கு
எமது ஸ்தாபனத்தின் நல்லாசிகள் !

# உள்ளூர் உற்பத்திப் பொருட்கள்

**விற்பதற்கும்**

கொழும்பு, யாழ்ப்பாணம் பொருட்கள்

**ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கும்**

எம்மிடம் தொடர்பு கொள்க.

## எஸ். எஸ். சண்முகம் அன் கோ

கொமிஷன் ஏஜன்ட்

**200, பிறின்ஸ் ஸ்றீற்,**

**கொழும்பு 11.**

# சீதனப் பிரச்சனையும் சிந்தனை விழிப்பும்

— புலவர் ஈழத்துச் சிவானந்தன் —

சனசமூகத்தின் தேவைகளைத் தெரிந்து சேவைகளைச் செய்யவேண்டிய பொறுப்பு பொது வாழ்வை வளம்படுத்த எண்ணும் இயக்கங்களுக்கே உண்டு. தனி மனிதர்களின் சக்தியும் செயல்பாடும் சேர்ந்தே பெரும் மாற்றங்களையும் மறுமலர்ச்சிகளையும் சமைக்க முடியும். உலக சரித்திரத்தில் திரண்டெழுந்த மனித சக்தியே சமூகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்ட வரலாற்றினைக் காணலாம். மக்கள் இயக்கங்கள் மனித வாழ்வின் இயக்க இயல்புகளைப் புரிந்து கொண்டு தொண்டாற்றினுல் இலட்சியத்தின் எல்லையை இலகுவில் சென்றடைய முடியும்.

ஒரு சமூகத்தின் வரலாறும் பழக்கவழக்கங்களும் நடைமுறைகளும் வாழ்க்கைப் போக்கிலே எவ்வாறு காலநிலைகளுக்கேற்ப ஒத்தோடியும் முரண்பட்டும் பயன்பட்டிருக்கின்றன என்பதனைப் பார்த்தே சமுதாய விழிப்புக்கும் உயர்வுக்கும் பொதுசன இயக்கங்கள் உழைக்கவேண்டும்.

தேவையற்ற வழக்கங்களையும் வேண்டாத நடைமுறையையும் விலக்கி, வாழ்க்கைக்கு வேண்டப்படும் வளமான சிந்தனைகளுக்கும் செயல்களுக்குமே மதிப்பும் பெருமையும் உண்டாகியிருக்கும் காலக் கட்டமிது. இந்தக் கட்டத்திலும் மாறி வரும் சூழ்நிலையிலும் சில மாறு மனப் பான்மைகளும் மறையா முறைகளும் மனித குலத்தைப் பீடித்திருப்பதைக் காண முடிகிறது. துன்பமும் தொல்லைகளும் நெருக்கி வேதனைப்பட வைத்தாலும் அழுங்குப் பிடியாய் சில வழக்கங்களைச் சமூகம் பற்றி நிற்கிறதைப் பார்க்கிறபோது பரிதாபமே உண்டாகிறது. வளரும் இளம் சமூகத்தினருக்கு எதிர்காலப் பிரச்சனைகளில் சமூக இருளை — இன்னல்களைக் களைந்தெறியவேண்யடி பாரிய பொறுப்பும் முன்நிற்கிறது. ஊதியம்தேடுவதற்குரிய உழைக்கும்மார்க்கங்களை உருவாக்கி வேலையற்ற வெம்மை நிலைமைகளை மாற்றுவதோடு, வாழும் வயதில் சமூகத்தின் நடைமுறைகளாலும் கட்டுப்பாடுகளாலும் வாழ முடியாது தவிக்கும் கன்னியரின் துன்பம் துடைத்து அவர்களுக்கு வாழும் சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க வேண்டிய கடமைப்பாடும் இளைஞர்களுக்கே உண்டு.

கள்ளம் கபடமற்ற செம்மை சான்ற சிந்தனைகளும் கால ஓட்டத்திற்குரிய திட்டங்களும் பொய்மையற்ற புதிய போக்குகளும் இளந் தலைமுறையினர்க்கு இயல்பாகவே உண்டென்பதை பல உளநூல் விற்பன்னர்கள் உரைத்துள்ளார்கள். சமூக முன்னேற்றத்திற்குரிய சரியான பாதையைக் கண்டுபிடித்து அதிலே தடங்கலின்றி வீறு நடை போடுவதில் வாலிப உள்ளங்களே விருப்பமுடன் ஈடுபடக்கூடியன. அவர்களின் ஆக்கங்களில் ஊழலுக்கும் குறைபாடுகளுக்கும் இம்மியளவும் இடமில்லை. புதிய சரித்திரத்தை உருவாக்க உத்வேகம் கொண்டுள்ள புதுயுக புருஷர்களின் எண்ணங்களை திசைதிருப்பிவிட்டு மறுமலர்ச்சி மார்க்கங்களுக்கு தடை உண்டாக்குவது முதிர்ந்தவர்கள் என்று சொல்லப்படுகின்ற சில மன முதிர்ச்சியற்ற மனிதர்களே.

வளர்ந்தோங்கவேண்டிய வண்மைமிகு எண்ணங்கள் எற்றுண்டு மறைந்துவிடுவதற்கும் பின்னோக்கிய வேகமற்ற தன்மைக்கும் சில முதிர்ந்தவர்களே காரணமாயிருக்கிறுர்கள். இதனைக் கருத்திலிருத்தியே இளைஞர்கள் சீரிய காரியங்களுக்கு வீரியம் கொள்ள வேண்டும். அந்த வைராக்கியத்தோடு சமூக மரபுகளை உடன்பட்டு மறுத்தும் இணங்கியும் பிணங்கியும் குறிக்கோளைச் சென்றடைய வேண்டும்.

இன்றுள்ள சமூகக் கொடுமைகளில் முதன்மையானதாய் எல்லாரையும் வருந்த வைக்கும் நடைமுறையாய் விளங்குவது சீதனம் என்னும் வழக்கமே. இந்த வழக்கத்தின் வரலாறு நீண்டது. நியாயமான அன்பளிப்பு முறை அநியாயமான அட்டூழியமாக உருமாறி — வாழ்வுக்கு வசதியென்பது மறைந்து வாழ்க்கைக்கே இருள்மயமாய் வடிவெடுத்து நிற்கிறது. இதனை மாற்றியமைப்பதற்குரிய சிந்தனைகளும் செயல்முறைகளும் உடனடியாகத் தொழில்படவேண்டும். இத் தொழிற்பாட்டில் முக்கிய கவனம் செலுத்தி முயற்சிகளைத் திருவினையாக்கவேண்டியவை சமூக இயக்கங்களே. இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காகவே பரந்துபட்ட ஓர்இயக்கம் தொடங்கப்படல் வேண்டும்.

அந்த இயக்கம் ஆன்மீக நெறியினைத் தழுவியதாகவும், பக்கஞ்சாராப் பக்குவமும் சத்திய நோக்கும் நிரம்பியதாகவும் இருத்தல் தலையாயது. சீதனப் பிரச்சனையால் தாக்குண்டு தவிப்பவர்களைக் கண்ணுற்ற சில இளைஞர்களும் யுவதிகளும் எதிர்ப்புக் குரல் கிளப்பி ஊர்வலங்களும் போராட்டங்களும் நடத்தியுள்ளார்கள். ஆந்திராவின் தலைநகரான ஐதராபாத்திலும், பெங்களூரிலும் புதுயுகத்தினை சிருஷ்டிக்கும் இளந் தலைமுறையினர் ஊர்வலம் நடத்தி போர்க் கோலம் காட்டினுர்கள்.

நமது இலங்கை நாட்டிலே அதுவும் தமிழ்ப் பகுதிகளிலே ஊறி உறைந்திருக்கும் கறையாகிய சீதனப் பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு நமது புதுயுக புருஷர்களும் நவயுக நங்கைகளும் தீவிர கவனம் செலுத்துதல் நல்லது. சீதனப் பிரச்சனையால் சில குடும்பங்களில் உழைப்பிருந்தும் உணவிருந்தும் உறக்கமின்றியும் உவகையின்றியும் சஞ்சலப்படுவதைக் காணமுடிகிறது. நல்லனவற்றிற்குரிய எண்ணங்களும் எழுச்சிகளும் அற்றுப்போய், நம்பிக்கை வரட்சியும் விரக்தியும் வேதனையும் ஏக்கப்பெருமூச்சுமே இந்தச் சமூக நோயால் பலரை நாளுக்கு நாள் கொன்றுகொண்டிருக்கிறது. இப்போதைய நெருக்கடி நிலைமையில் உண்பதற்கும் உடுப்பதற்குமே உழைப்பவை போதாமல் இருக்கின்றபோது சீதனத்திற்கும் பொருள் சேர்ப்பதென்பது எத்தகைய துன்பத்தைக் கொடுக்கும் என்பதை எண்ண வேண்டும். பெண்களுக்குரிய வருடமாக இவ்வருடத்தைப் பிரகடனப்படுத்தியுள்ள சூழ்நிலையில் பெண்களை வாட்டும் வழக்கமொன்று போயகலப் போராடவேண்டும். அந்தப் போராட்டத்திற்குரிய சிந்தனைகளாகச் சிலவற்றைக் குறிப்பிடலாம்.

வீடுவீடாகச் சென்று சீதனக் கொடுமைகளை விளக்கவேண்டும். வசதிகூடிய இடத்து இளைஞன் வசதி குறைந்த இடத்துப் பெண்ணையும் வசதி கூடிய வீட்டுப் பெண் வசதி குறைந்த வீட்டு இளைஞனையும் மணப்பதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். பெரும் வசதிகளைப் பெற்றவர்கள் சீதனக் கொடுமை காரணமாகக் கல்யாணம் செய்யாதிருக்கும் கன்னியர்களுக்கு கலியாணம் செய்துவைக்க முனைய வேண்டும். அதிக சீதனம் வாங்கும் வாய்ப்பினைப் பெற்ற வாலிபன் அதனைப் பெற்று அதில் ஒரு பகுதியை வசதியற்ற பெண்களுககு வழங்கி அவர்களை வாழவைக்க நினைக்கவேண்டும். இருபத்தைந்து வயதுக்குமேல் பெண்கள் சீதனம் கொடுக்க முடியாத காரணத்தால் வாழ முடியாது வீட்டோடிருக்கும் நிலைமையை மாற்றியமைக்கவேண்டும். இதற்குரிய மாற்றத்தினை ஏற்படுத்துவதற்கு உணர்ச்சிமிக்க வாலிபர்கள் சத்திய எழுச்சி கொள்ளவேண்டும். அவர்களின் எழுச்சிக்கு முன்னுல் சில சமூக நோய்கள் முற்றுக மாறிவிடும்.

இவற்றினையெல்லாம் செயல்முறைப்படுத்த இந்தப் பிரச்சனைக்கென்றே ஓர் இயக்கம் உதயமாவது அவசியம். அவ்வியக்கத்தில் அப்பழுக்கற்ற பொதுநல நோக்குடையோரே அங்கம் வகிக்கவேண்டும். இந்தத் தார்மீகச் சிந்தனை வழியில் செயல்படுவோமானுல் எல்லோருக்கும் மகிழ்வும் நிறைவும் கிடைக்கப்பெற்று குதூகல வாழ்வு வாழ வழி பிறக்கும்.

''இயக்கம் ஒன்று இல்லையென்றுல்
மயக்கம் தருகின்ற அச்செழுத்துக்கள்
பட்டாசு வெடிகளே தவிர
பீரங்கி முழக்கங்கள் அல்ல.''

— மே. நு. ரா.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்
வெள்ளி விழாவை வாழ்த்துகிறார்கள்.

# ராணி
# இயந்திர மரத் தொழிற்சாலை

42, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

எங்களிடம் :

சிறந்த முறையில் குறைந்த செலவில்
**மரத் தளபாடங்கள்**

வீடு கட்டுவதற்குத் தேவையான
**நிலை, யன்னல், கதவுகள்**
**தியேட்டர் கதிரைகள், தளபாடங்கள்**

ஆகியன குறித்த நேரத்தில் இயந்திர சாதனங்கள் மூலம்
செய்து பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர் :

N. சிவம்

நீர்வேலி வடக்கு, — நீர்வேலி.

With the best Compliments from:

# THE MALAYAN TRADING COMPANY

128, 130. K. K. S. Road
JAFFNA.

☎ 547

**Dealers in:**

*Hardware, Brassware &*

*All Kinds of Paints*

குறைந்த செலவு! நீடித்த பாவனை!!

காமாட்சியம்பாள் சனசமூக நிலையம்
பல்லாண்டு வாழ்கவென
இவ்வெற்றி விழா நல்நாளில்
வாழ்த்துகின்றோம்.

# கிருஷ்ணா ரிங்கர் கராஜ்

நீர்வேலிச் சந்தி, நீர்வேலி.

உரிமையாளர்: நா. சின்னத்தம்பி (கிட்டு)

உங்கள் மோட்டார் வண்டிகள்
எதுவானாலும் சரி
திறமானமுறையில் பழுதுபார்த்தும்,
ரிங்கர் வேலை செய்தும்
கொடுக்கப்படும்.

*Visit :*

*For your*

BRIDAL SAREES. SALU SALA TEXTILES.
AND
OTHER ALL KINDS OF TEXTILES.

உங்களுக்குத் தேவையான சகலவிதமான
புடவைத் தினிசுகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

*Benares Silk Store*

**159, K. K. S. Road, — Jaffna.**

★ பெனுறிஸ் சில்க் ஸ்ரோர் ★

159, காங்கேசன்துறை வீதி, — யாழ்ப்பாணம்.

---

காமாட்சியம்பாள் சனசமூக நிலைய வெள்ளி விழாவை
வாழ்த்துபவர்கள்.

பிரபா போட்டோ

புகைப்படத் துறையில் குறுகிய காலத்தில்
முன்னணியில் திகழ்வது

# பிரபா போட்டோ

108, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

# "கோயில் சுடுகாடு"

— வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள் —
சாவகச்சேரி

இறைவன் எங்கும் இருக்கிறன். அவன் இல்லாத இடம் ஏதும் இல்லை. இறைவனுக்கு கடவுள் என்ற பெயர் பழங்காலந் தொட்டே வழங்கி வருகிறது. கட, உள் என்ற இரண்டு சொற்கள் இணைந்தது அது. இறைவன் எல்லாத் தத்துவங்களையும் கடந்து நிற்கிறன். அவனுள் எல்லாம் அடங்கியிருக்கிறது. அதனல் அவனைச் 'சர்வ வியாபகன்' என்று வடமொழியாளர் கூறுவர். அடங்கியது என்பது வியாப்பகம். அடங்கியது என்பது வியாப்பியம். இறைவனுக்குள் எல்லாம் அடங்கியது. அவற்றைத் தன்னுள் அடக்கிக்கொண்டு அவற்றைக் கடந்து அப்பாலும் இருக்கிறன். ''அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானய்'' என்பது மாணிக்கவாசகரது திருவாசகம்.

''பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணனந்தன்'' இறைவன். எனவே, அவன் கோயிலிலும் இருக்கிறன். தூணிலும் இருப்பான். துரும்பிலும் இருப்பான். அணுவிலும் இருப்பான். அணுவைச் சதகூறிட்ட கோணிலும் இருப்பான். இவ்வாறு இறைவன் எல்லாவற்றிற்கும் அப்பால் எல்லாவற்றையும் கடந்து நிற்பதாலும் அதே சமயத்தில் எல்லாவற்றினூடும் உறைவதாலும் அவனுக்குக் கடவுள் என்ற பெயர் வந்தது.

இறைவன் மற்ற இடங்களில் இருப்பதற்கும் கோயிலில் இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. மற்ற இடங்களில் அவனை நினைப்பவர் அரியர். எங்கும் அவனைகப் பார்க்கும் ஞானியருக்கு அல்லாமல், எல்லா இடங்களிலும் அவன் இருப்பதை ஏனையோரால் உணர முடியாது. கோயிலிலோ இறைவனுடைய திருவுருவங்கள் இருப்பதனல் அவன் இருப்பதை உணர முடிகின்றது. இறைவன் எங்கும் உள்ளான் என்பது செய்தியளவில் நமக்குத் தெரியுமேயொழிய, உணர்வினிலே அந்தஅனுபவம் தட்டுப்படுவதில்லை. உள்ளத்திலே அத்தகைய உணர்வை ஊற்றெடுக்கச் செய்வதற்குக் கோயில் இருக்கிறது. கோயிலைக் கண்டவுடன் நமக்குக் கடவுளின் நினைவு வருகிறது. கோயில் நாம் கடவுளை நினைக்கும் இடமாக உள்ளது. பசுமாட்டின் உடம்பு எங்கும் உள்ள குருதியே பாலாகிறது. ஆனலும் அதன் மடியிலேதான் பாலைக் கறக்க முடிகிறது. அது போலக் கோயிலில் நாம் இறைவனை வழிபட்டு அவனருளால் வாழலாம் என்று சமய நூல்கள் கூறுகின்றன.

மாணிக்கவாசகர், ''கோயில் சுடுகாடு; கொல் புலித் தோல் நல்லாடை'' என்று பாடியுள்ளார். அங்கே இறைவனுடைய கோயில் 'சுடுகாடு' என்று குறிப்பிட்டுள்ளார். அந்த இடத்தில் வானளாவிய கோபுரம் இல்லை. கட்டிடம் இல்லை. மூர்த்தி இல்லை. பூஜை இல்லை. திருவிழாக்கள் இல்லை. அது எப்படிக் கோயிலாகும்?

உலக நிலையாமையை அளப்பரிய நூல்கள் சொல்வதை விட, 'சுடுகாடு' கண்கூடாக எமக்கு எடுத்துக்காட்டுகிறது. சமய நூல்களைப் புரட்டாமலே, ''காயமே இது பொய்யடா; காற்றடைத்த பையடா'' என்பதை நமக்குச் சுடுகாடு சொல்லாமல் சொல்லுகிறது. உலகம் நிலையற்றது என்பதை எண்ணும்போது, இறைவன் ஒருவனே நிலையான பொருள் என்பதும் தெளிவாகிறது. எத்துணை மனத் திண்மையுடையவனும் தன்னுடைய உறவினரோ, நண்பரோ இறந்தபோது சுடுகாட்டிற்குப் போனல், அவ்விடத்தில் அவனுக்குச் சிறிதளவு ஞானேதயம் ஏற்படவே செய்யும். 'நெடுநல் உளனெருவன் இன்று இல்லையே' என்று அங்கலாய்க்கிறர் ஒருவர். எல்லோரும் இப்படித்தான். நாமும் அப்படித்தான் என்றர் மற்றெருவர். 'எல்லாம் ஆண்டவன் கையில் இருக்கிறது; நம் கையில் என்ன

இருக்கிறது?' என்று உண்மைத் தத்துவத்தை வெளிப்படுத்துகிறார் வேறொருவர். இன்னும் சிலர் நிலையற்ற வாழ்வை நினைத்து ஏக்கமுறுதலையும் காண்கிறோம் சுடலையில். இதை மயான வைராக்கியம் என்று அறிஞர்கள் கூறுவர். பின்னர் வீடு திரும்பியதும் அத்தகைய உணர்வு நிலைத்து நிற்கிறதோ இல்லையோ அது வேறு விடயம். ஆனால், அந்த இடத்தில் இருக்கும்போது அந்தச் சூழ்நிலையில் உலகம் நிலையற்றது, வாழ்க்கை பொய்யானது, உடம்பு அழியுந்தன்மையது. இறைவன் ஒருவனே நிலையானவன் என்ற எண்ணம் உருவாவது உண்மையல்லவா!

கோயில் இறைவனுடைய திருவுருவங்களும், பூசைவழிபாடுகளும், அடியார்களின் பிரார்த்தனைகளும் இறைவனைப் பற்றிய உணர்வை உள்ளத்தில் உருவாக்குகின்றன. எனவே, கோயிலில் நாம் உடன்பாட்டுவகையில் கடவுள் உணர்வைப் பெறுகிறோம். கோயில் கடவுள் உணர்வை உண்டாக்கும் சூழ்நிலை அமைந்த இடம் என்றால், அத்தகைய உணர்வை எதிர்மறைவகையில் நினைப்பூட்டும் சுடலையும் கோயில்தானே. இதனாலன்றோ ''சுடலை சேர்வது சொற் பிரமாணமே'' என்கிறார் ஒருவர். மயானத்தில்உள்ள சூழ்நிலை அனைத்தும் நிலையற்றவை என்பதை உணர்த்தி, அதன் வாயிலாக இறைவன் ஒருவனே நிலையானவன் என்பதைத் தெளிவுபடுத்துவதனாலேயே மணிவாசகர் ''கோயில் சுடுகாடு'' என்று பாடியருளினார்.


# ஸ்ரான்லி கோப்பறேசன்

வானொலிகள், வானொலி உதிரிப்பாகங்கள்
மின்சார உபகரணங்கள் முதலியன வாங்குவதற்கும்,
நம்பிக்கையுடன்
கைதேர்ந்த நிபுணர்களால் திருத்துவதற்கும்
ஒரு சிறந்த இடம்

## ஸ்ரான்லி கோப்பறேசன்,
*37, ஸ்ரான்லி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

காமாட்சியம்பாள் சனசமூக நிலைய
வெள்ளி விழாக்காணும் இவ்வேளையில்
எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

உங்களுக்குத் தேவையான
சகலவிதமான

## இரும்பு வகைகள்
## பெயின்ற் வகைகள்
## பித்தளைச் சாமான்களுக்கு

இன்றே நாடுங்கள்.



# நாஷனல் காட்வெயர் ஸ்ரோர்

21/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலைய
வெள்ளி விழாவிற்கு எங்கள்
இதங்கனிந்த ஒத்தாசையை புரிகின்றோம்.

## நா. க. மயில்வாகனம் அன் கோ

**உள்ளூர் விளைபொருள் கமிஷன் விற்பனையாளர்கள்.**

**68, நாலாம் குறுக்குத் தெரு, கொழும்பு.**

தொலைபேசி. 22250 — தந்தி: வாகனம்

---

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்துக்கு
எமது வாழ்த்துக்கள்.

## *C. S. Kailasampillai & Sons*

DRUGS MERCHANTS & COMMISSION AGENTS.

## க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்

மருந்துச்சரக்கு வியாபாரம்.

**பெரியகடை, — — யாழ்ப்பாணம்.**

கும்பாபிஷேக தேவைகளுக்கு
தேவையான **அஷ்டபந்தன மருந்து**

★ கோவில் அபிஷேகர், திருவிழாக்கள் ★ திருமண விழாக்கள்
★ புதுமனைப் பிரவேசம் ★ புதுமனைக்கு அத்திவாரமிடல்

ஆகிய வைபவங்களுக்குத் தேவைப்படும்
அபிஷேகத் திரவியங்கள், கஸ்தூரி, கும்குமப் பூ, கோரோசனை, புனுகு, ஜவ்வாது, விளைவுகூடம், சாம்பிராணி, ஊதுபத்தி, வாசனைதிகள் பன்னீர், அத்தர், நவரத்தினம், பஞ்சலோகம் முதலிய சகல சாமான்களும் மற்றும் சந்தனம், குங்குமம், சாந்துப் பொட்டுகள் ஆகியவைகளும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில் மலிவாக எம்மிடம் கிடைக்கும்.

★ மயில் மார்க் சந்தன வில்லைகள் ★ சுகந்த சந்தனப் பவுடர்
★ சந்தனக் குழம்பு நறுமணம் கமழும்
(உடன் யந்திரத்தில் அரைத்தது)

எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம்

## எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச் சரக்கு வாசனைதிகள் இறக்குமதியாளர்களும்,
மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

53, கே. கே. எஸ். ரோட்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 541

''பாலேந்திரா பில்டிங்''
160, செட்டியார் தெரு, கொழும்பு 11.
Residence: 7068

வெள்ளிவிழா சிறப்புடன் நிகழ வாழ்த்துகிறோம்!

உங்களுக்குத் தேவையான சகலவிதமான

★ இரும்பு வகைகளும்,
★ பெயின்ற் வகைகள்,
★ கூரைத் தகடுகள்
★ பித்தளைச் சாமான்கள்

யாவற்றையும்

மலிவாகப் பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்

# திருப்பதி ஹாட்வெயர்ஸ்

9, மொர்சாக் கட்டிடம்,
ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்
வெள்ளி விழாவுக்கு எமது
நல் வாழ்த்துக்கள் !

சகலவிதமான

பாண், பணிஸ், பிஸ்கட்
கேக் முதலியன

சுகாதார முறைப்படி குறித்த நேரத்தில்
செய்து கொடுக்கப்படும்.

பிறேமசிறி பேக்கறி
நீர்வேலி

ප්‍රේමසිරි බේක්කරිය
නීර්වේලි.

உரிமையாளர்: L. D. பிரேமதிலகா

# பாடசாலையும் சமூகமும்

சின்னையா சிவநேசன்
அதிபர், கிறிஸ்தவ கல்லூரி கோப்பாய்.

கல்வி புகட்டும் களமாக அமையும் பாடசாலையைப் பற்றியும் சமூகம் பற்றியும் ஆராய்வதற்கு முன் கல்வி பற்றிய சில விளக்கங்கள் இங்கு இன்றியமையாதனவா கின்றன. கல்வி பற்றிக் காலத்துக்குக் காலம் பல அறிஞர்கள் பல்வேறு விளக் கங்களைக் கூறிச் சென்றனர். ''உடல், உளம், ஆன்மா ஆகியவற்றின் இயற்கைப் பெற்றி களை வெளிக்கொணர்ந்து விளக்கம் பெறத் தூண்டுவதே உண்மையான கல்வி'' எனக் காந்தியடிகள் கூறியுள்ளார். ஆனால் சுவாமி விவேகானந்தரோ ''ஆண்மை தரும் கல் வியே கல்வி'' என வேறொரு கோணத்திலி ருந்து கல்வியை நோக்குகின்றார். அல்பிரட் வைற்ஹெட் (Alfred Whitehead) என்ற ஆங்கிலவறிஞர் ''அறிவை உபயோகிக்கும் அருங்கலையை அறியத் தருவவே கல்வி'' என்கிறார். பண்டைய கல்விச் சிந்தனையா ளர் பலர் கல்வி என்பது தனிப்பட்ட ஒரு வனின் அடிப்படைத் திறன்களை வளர்க்க வும் அவனுக்கு நல்ல அறிவொழுக்கங்களைக் கற்பிக்கவும் வல்லதாய் அமையவேண்டும் எனக் கருதினர். ஆனால் வேறுசிலரோ சிறி யவர் பெரியவராகி ஏற்றதொரு தொழிலைச் செய்து பணம் சம்பாதிப்பதற்குத் தேவை யான பயிற்சியை அளிப்பதே கல்வி என்று எண்ணுகின்றனர். எனினும் யாவரும் ஏற் றுக்கொள்ளும் பொதுவுடமைக் கருத்தாக ''ஒரு மனிதனின் நடத்தையை மாற்றும் சாதனமே கல்வி'' என்ற எண்ணக்கரு விளங்குகின்றது. மனித வாழ்க்கையைச் செம்மைப் படுத்துவதே கல்வியின் முதல் நோக்கமாகும். மனிதன் சமூகத்தில் வாழ் கின்றான். எனவே கல்வி சமூகம் காண விழைகின்ற சான்றோனை உருவாக்கிச் சமூ கத்திற்கு அளிக்கவேண்டும். சாதாரண மனிதனை சமூக வாழ்க்கையை வளம்படுத் தும் சான்றோனாக நெறிப்படுத்தல் கல்வியின் இன்றியமையாத கடமையாகும். இதனால் தான் உலகச் சமூகங்கள் யாவும் கல்வி மீது போதிய அக்கறை காட்டுகின்றன. எனவே கல்வி புகட்டும் களனாக விளங்கும் பாடசாலை எதிர்கால நற்பரம்பரையை உரு வாக்கும் புனித இடமாகக் கருதப்படுகிறது.

ஆதிகாலத்தில் பாடசாலைகள் இருக்க வில்லை. குடும்பத்தில் உள்ள முதியோர்கள் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக் கொடுத் தனர். இத்துடன் கோவில்களிலும் அற நிலையங்களிலும் கல்வி போதிக்கப்பட்டு வந்தது. குருகுலவாசக் கல்வி முறை பண்டை இந்தியாவில் பரவி இருந்ததற்குப் பல சான்றுகள் உள்ளன. பல்வேறு கலை களையும் பயின்று கல்வி கேள்வி, ஞானத் தில் சிறந்து விளங்கவேண்டுமென விரும்பும் அரச பரம்பரையினரும் நல் வசதிபடைத் தோரும் குருவை நாடிச் சென்று அவருடன் ஒரே குடிலில் வசித்துப் பணிவிடைகள் செய்து படித்தனர். பின்னர் படிப்படியா கச் சிறு திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஆரம் பித்தன. குருவின் வீட்டுத் திண்ணையில் காலையில் எழுந்து, குளித்துப் பயபக்தியுடன் கோவிலுக்குச் செல்வது போன்று சிஷ்யர் ஒன்று கூடுவது அந்நாட்களில் எங்கும் காணப் பட்டது. குருவைக் கடவுளாகக் கருதிய வர லாறுகளும் இல்லாமலில்லை. குருவின் வேண்டுகோளுக்காகப் பெருவிரலை வெட் டிக் கொடுத்த ஏகலைவன் போன்றோரும் இருந்தனர். இவ்வாறு குடிசையிலும், திண்ணையிலும் ஆரம்பமாகிய பள்ளிகள் நாளடைவில் சமூக மாற்றத்திற்கும் பொரு ளாதார மாற்றங்களுக்குமேற்ப மாற்ற மடைந்து பெரும் பாடசாலைகளுக்கு வழி வகுத்தன.

குருகுல வாசக் கல்வி முறையில் குரு வுக்கு வேண்டிய பணிவுடைகளைச் செய்வது மட்டுமல்லாமல் அவருக்கு வேண்டிய உண வுப் பொருட்களை உற்பத்தியாக்குவது

சமைப்பது. வேறு பல தொண்டுகள் செய்வதே கல்வி பெறுவதற்கான கைமாறுக இருந்தது. பணம் என்ற பேச்சுக்கே இட மில்லை. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்த காலங்களில் உணவுப் பொருள்கள் காய்கறி வகைகள் முதலியவற்றைக் குருவுக்குச் சிஷ்யர் தத்தமது வீடுகளிலிருந்து எடுத்துச் சென்றனர். அத்துடன் வேறு பல உதவிகளை யும் செய்து வந்தனர். இதனுல் சமூகத்தில் குருவுக்கு நன்மதிப்பும் பயபக்தியும் இருந் தது. கிராமத்தில் அவ்வப்போது எழும் சண்டைசச்சரவுகளைத் தீர்ப்பதற்கும் ஆசானை நாடினர் மக்கள். பெருவிழாக்கள், முக்கிய சடங்குகள் ஆகியவற்றிலும் ஆசா னுக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. இதனுல் ஆசானுக்கு அடிபணிந்து அறவழியில் ஒழு கினர் மக்கள். சமூகத்திற்கும் ஆசானுக்கு மிடையில் நெருங்கிய தொடர்புகள் இருந் தன. பெற்ருேர் மாணவருக்கு முன் மாதிரி யாய் அமைந்தனர். அதாவது ஆசானைக் கனம் பண்ணுதல், அவருக்குத் தக்க மரி யாதை செலுத்துதல் போன்றவற்றை ஊர் மக்களென்ன அக்கால அரசரே செய்து வந்தனர். இதனுல் சிறுர்களுக்கு அப்பழக்க வழக்கங்கள் இயற்கையாக அமைந்திருந் ததில் வியப்பொன்றுமில்லை. ஆனுல் இன்று ஆசிரியருக்குக் காட்டப்படும் மதிப்பும் மரி யாதையும் பற்றி நான் உங்களுக்கு எடுத் துக்கூறத் தேவையில்லை. எனவே பாடசாலை யில் ஒரு மாணவன் நடந்து கொள்ளும் முறைக்கு அவனது பெற்ருேரும் வீட்டுச் சூழலுமே காரணமாய் விளங்குகின்றன என்பது கூருமலே விளங்கும்.

ஒரு சமூகத்தில் நிலவுகின்ற பழக்க வழக்கங்கள் எவ்வாறு ஒரு வளரும் பிள்ளை யைப் பாதிக்கின்றன என்பது பற்றிப்பல உளவியலறிஞரும் பல ஆராய்ச்சிகள் செய்து பேருண்மைகள் பலவற்றை வெளியிட்டுள் ளனர். இவற்றுள் மார்கிறற் மீட் என் பாரின் ஆராய்ச்சிகள் உலகப் புகழ் பெற்றன. இவர் பழங்குடி மக்களின் குழந்தை வளர்ப்பு முறை பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்தார். அரபேஷ் (Arapesh) மலைச் சாதியினர் நியூ கினியில் உள்ள பழங்குடி மக்களாவர். இவர்கள் குழத்தைகளிடம் மிக்க அன் புடன் நடந்து கொள்வர். கோபமாக ஒரு வரோடொருவர் பேசமாட்டார்கள். பிள்ளை களுக்குக் கட்டுப்பாடுகள் கிடையா. இதனுல் அப்பிள்ளைகள் போர் ஊக்கம் எதுவுமின்றி ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். இவர் களிடம் போட்டி, பொருமை, பூசல் எதுவு மில்லை. ஆனுல் முண்டுகுமோர் (Mundugu-mor) என்ற இன்னெரு மலைச்சாதியைச் சேர்ந்த பெற்ருேர் அன்பு காட்டாமலும், அளவுக்கு மிஞ்சிய கட்டுப்பாடுகளை விதித் தும் தம் பிள்ளைகளை வளர்க்கின்றனர். இவர் ளிடம் ஏமாற்றும் தன்மை, கொலை, தீய நடத்தைகள், சண்டை ஆகியன அதிகமாக உண்டு. ஒருவன் எத்தனைபேரைக் கொன்று அவர்களின் தலைகளைத் தனது குடிசையில் கட்டித் தொங்க விடுகின்ருனே அவன் தான் வீரன். அவனுக்குச் சமூகத்தில் நல்லபெயரும் புகழும் கிடைக்கும். இவ்வாருன சமூகப் பண்பாட்டினுலேயே பிள்ளைகளும் கெட்ட வர்களாகின்றனர். எனவே வருங்காலச் சமு தாயம் நல்ல பழக்க வழக்கமுடையதாக அமையவேண்டுமானுல் பெற்ருேராகிய நாம் நற்பழக்க வழக்கங்களை உடையவர்களாக விளங்க வேண்டும்.

இது பற்றி நீங்கள் அனுபவ வாயிலாக நன்கறிந்திருப்பீர்கள். ஒரு தந்தை குடிகார ஞக இருந்தால் அக்குடும்பத்தில் நிகழும் சண்டை சச்சரவுகள், பேச்சு வார்த்தைகள் முதலியவற்ருல் எவ்வாறு சிறு பிள்ளைகள் பாதிக்கப்படுகிருர்கள் என்பதைப்பற்றி நீங் கள் எல்லோரும் அறிவீர்கள். எனவேதான் அக்காலத்தில் 'அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி' என்ற முதுமொழி கடைப்பிடிக் கப்பட்டு வந்தது. தலைவன் சரியாக நடந் தால் தான் நாடே நந்நிலையில் நடைபெ றும். இதுபற்றி நாங்கள் அறிந்திருந்தும் நம்மை நாமே திருத்திக் கொள்ளத் தவறி விடுகிருேம். ஒரு நாளின் பெரும்பகுதியை வீட்டிலே கழிக்கும் ஒரு குழந்தையின் பழக் கவழக்கங்களைப் பாடசாலையே கவனித்துக் கொள்ளவேண்டுமென எதிர்பார்க்கும் பெற் ருேர் தமது பொறுப்பை மறந்து விடுகின் றனர். மனமுறிவும், காப்பின்மையும் போ திய அன்பும் இல்லாத ஒரு குழந்தைக்கு எவ்வாறு ஒரு ஆசிரியர் கல்வி புகட்ட முடியும் என்பதைப் பெற்ருேர் நன்கு உண ரவேண்டும். கல்விக்கு ஏற்ற மனேநிலை இருந்தால் தான் பிள்ளை ஆசிரியன் சொல் வதைக் கேட்டுக் கற்கமுடியும். வீட்டிலே அமைதியின்மை, பசி போன்ற உடலியற் தேவைகள் முதலியவற்றுக்காளான பிள்ளை

கள் கல்வி கற்க முடியாமல் திண்டாடு வதை நான் அனுபவ வாயிலாகக் கண்டி ருக்கிறேன். எனவே சமூகம் தன்னைத்தானே திருத்திக் கொண்டு நல் வழியில் சென்றால் தான் வருங்காலச் சந்ததியும் நல்லொழுக்க முடையதாக வரும் என்பது கூறாமலே விளங்குகின்றது.

ஒரு பாடசாலை எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குவதற்கு முக்கிய காரண மாய் இருப்பவர்கள் மாணவர்களே. ஆசிரி யர் எப்படிப் பகிரதப் பிரயத்தனம் செய் தாலும் மாணவர் அக்கறை கொள்ளாவி டின், அவரின் முயற்சி விழலுக்கிறைத்த நீராகவே இருக்கும். முக்கியமாகச் சில தனியார் பாடசாலைகள் கல்வி, விளையாட்டு, பல கலைப் போட்டிகள் ஆகியவற்றில் சிறந்து விளங்குகின்றன என்றால் அதற்கு அங்குள்ள மாணவர்களும் அவர்களை வளர்த்தெடுக்கும் பெற்றோருமே காரணமாகும். குறிப்பாகப் பணவசதி படைத்த பெற்றோரின் பிள்ளை களே அங்கு கல்வி கற்பதால், அவர்களுக் குப் போதிய வசதிகளும் வீட்டிலிருக்கும், இதனால் படிப்புக்கேற்ற மனோநிலையும் ஆர் வமும் இயற்கையாகவே அமைந்து விடுவ தில் வியப்பொன்றுமில்லை. இதனால் ஆசிரி யர்களின் உறுதுணையுடன் அவர்கள் எல் லோரும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். இந்நிலைமை எல்லாப் பாடசாலைகளிலும் எதிர்பார்க்க முடியாதெ னினும் பெற்றோர் கூடியவளவு தமது பிரச் சினைகள் தம் பிள்ளைகளைத் தாக்காது நடந்து கொள்வதுடன் அவர்களது படிப் பிலும் நடத்தையிலும் அக்கறை கொள் வது அவசியம். அதாவது சமூகமும் பாட சாலையும் நெருங்கிய தொடர்புடன் பழகிக் கொள்ளவேண்டும். சமூகமே பாடசாலை, பாடசாலையே சமூகம் என்ற நிலை ஏற்பட வேண்டும். பாடசாலையில் நிகழும் மாற் றங்களும் பிரச்சனைகளும் சமூகப் பிரச்சனை களே. சமூகத்தின் நடத்தைகள் பாடசாலை யில் கட்டாயமாகப் பிரதிபலிக்கும். எனவே தான் பாடசாலையின் தேவைகளைப் பெற் றோரும், பெற்றோரின் கஷ்டங்களைப் பாட சாலையும் நன்குணர்ந்து செயல்படுவதற்கா கப் பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் தோற்று விக்கப்பட்டன. இச்சங்கங்கள் பாடசாலை யின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் நல்ல பல தொண்டுகளை ஆற்றி வருகின்றன. எனினும் சில சங்கங்களில் அங்கத்தவரின் வீணான போட்டி பொறாமைகளினால் கல்லூரியும் இதனால் சமூகமும் பாதிக்கப்படுகின்றன. சமுதாய சேவை, ஒன்றையே குறிக்கோ ளாகக் கொண்டவர்கள் எவரும் முன் னின்று உழைத்தால் எச்சங்கமும் நற்சங்க மாக மிளிர முடியும். ஓரிருவரது சுயநலத் திற்குச் செவிசாய்ப்பதால் தமது பிள்ளைக ளும் மறைமுகமாகச் சமூகமும் தாக்கமடை கின்றது, வீழ்ந்து போகின்றது என்பதைப் பெற்றோர் நன்கு உணரவேண்டும். ஒரு கிராமத்தில் அல்லது ஒரு சமூகத்தில் உள்ள ஒரு பாடசாலை சிறந்தது என்று கூறினால் அச்சமூகம் சிறந்தது என்றுதான் அர்த்தம். அவ்வாறே ஒரு சமூகம் சிறந்து விளங்கினால் அதன் பாடசாலையும் சிறந்து விளங்கும் என்பது வெளிப்படை. இதனால் பாடசாலை ஆசிரியர்களையோ நிர் வாகத்தையோ குறை கூறுவதில் பயனில்லை. ஆனால் அதே வேளையில் அவர்களும் தம் கடமையைச் செய்யவேண்டும். அவர்கள் கடமை புரிகிறார்களோ என்பதைச் சமூக மும் நன்கு கூர்ந்து கவனிக்கவேண்டும். ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்குமிடை யில் நல்லுறவு வளரவேண்டும். இரு சாரா ரும் மாணவர் நலனுக்காக ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். பெற்றோருக்கு உள்ள பொறுப்புக்களைப் போன்று ஆசிரியர்களுக் கும் மாணவர்களைப் பழக்குவதில் பெரும் பொறுப்புண்டு. மாணவர்களுக்கு முன் மாதிரியாக நடந்து காட்டும் இலட்சிய புரு ஷர்களாக ஆசிரியர்கள் விளங்கவேண்டும். ஒரு இலட்சிய மனிதனைப் பின்பற்றியே மாணவர் தம் பழக்கவழக்கங்களை மாற்றி யமைத்துக் கொள்கின்றனர். எனவே அவர் கள் நாளும் பொழுதும் பழகும் ஆசிரியர் களைப் பின்பற்றுமாறு செய்வது ஆசிரியர் களின் பெரும் பொறுப்பாகும். ஆனால் தற்போதைய மாணவரோ திரைப்படக் கதாநாயகரை இலட்சிய புரிஷர்களாகக் கொண்டு அவர்களையே பின்பற்றித் தம் வாழ்க்கையைப் பாழடிக்கின்றனர். இந் நிலைமை மாறவேண்டும். இதற்கு ஆசிரியர் கள் முன்னின்று உழைக்க வேண்டும். இதற் குப் பெற்றோரும் உதவி புரியவேண்டும். மாணவர் கூறுவதை உண்மையென நம்பி ஆசிரியரைத் தூற்றுவதில் பெற்றோர் ஈடு படுவதும் விரும்பத்தக்கதல்ல. பிரச்சனை களை நேருக்கு நேர் அலசி ஆராய்ந்து தீர்த்

துக் கொள்ளுதல்மிகவும் நன்று. இவ்வாறன பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் முன்னின்று உழைக்க வேண்டும். பெற்றோர் ஒருபக்கமும் ஆசிரியர் இன்னொரு பக்கமும் நின்று கொண்டு ஒருவரை யொருவர் குறை கூறுவதால் பாதிக்கப்படுவது மாணவரும் பள்ளிக் கூடமுமே. எனவே தான் பள்ளிக்கூடம் முன்னேற இரு சாராரின் ஒத்துழைப்பும் மிகவும் அவசியமாகின்றது.

பள்ளிக்கூடத்திலுள்ள குறைநிறைகளை அதிபருக்கு எடுத்துக் கூறப் பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. இதற்காகக் கூட்டம் கூடிப் பிரேரணைகள் கொண்டு வரத் தேவையில்லை. அதே வேளையில் எந்த வொரு நிகழ்ச்சியையும் அலசி ஆராய்ந்து உண்மையைய் அறிந்து பின்னர் செயல்படுவதையே எல்லோரும் விரும்புவர். ஒருவர் இருவர் கூறுவதைக் கேட்டுச் செயலில் இறங்குதல் கூடாது. எந்தவொரு நிகழ்ச்சியும் கூற்றும் பிறர் மனதைப் புண்படுத்தாது செய்யப்படவேண்டும். பாடசாலை பல வகையினரும் நிறைந்த ஒரு கூட்டுச் சமூகம். எனவே எதையும் கவனமாகவே செய்தல் வேண்டும். சுற்றடலிலுள்ள பிள்ளைகளே ஒரு பாடசாலையில் படிக்கவேண்டும். அயலிலுள்ள பெற்றோரும் பாடசாலையில் அக்கறை கொள்வது போன்று மாணவ ஆசிரியர்களும் அயலில் அக்கறை கொள்ள வேண்டும். அவ்வூருக்குத் தேவையான சமூகக் காரியங்களிலும், சிரமதான சுகாதாரப் பணிகளிலும் மாணவர் ஈடுபடல் வேண்டும். அப்பொழுதுதான் மக்களும் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறை கொள்வர். பாடசாலை நிகழ்ச்சிகளுக்கு மக்கள் அழைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நல்லுறவு வளரும். சமூகம் வளர்ந்தால் பாடசாலை வளரும், பாடசாலை வளர்ந்தால் சமூகம் தானுகவே தளரும்.

---


வெள்ளி விழாக்காணும் காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்துக்கு எமது நல்லாசிகள்!

**ஆங்கில மருந்து வகைகள்**

**எதுவானாலும்**

**நியாய விலையில்**

**பெற்றுக் கொள்ளலாம்.**

# நாதன் டிஸ்பென்சரி

உரிமையாளர்: **வே. பத்மநாதன்**

**நல்லூர் மாக்கற்**

**கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.**

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலைய
வெள்ளிவிழாவிற்கு எமது இதயம் கனிந்த வாழ்த்துக்கள் !

# ராஜா பலசரக்கு மாளிகை

நீர்வேலி

சிறந்த புகையிலை,
சுருட்டுக்கள் மற்றும்
பலசரக்கு, சாய்ப்புச்
சாமான்களுக்கு இன்றே விஜயம்
செய்யுங்கள்.

உரிமையாளர்: இ. தர்மராசா

காளிகோவில் ஒழுங்கை,
நீர்வேலி.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலைய
வெள்ளி விழாவை வாழ்த்துகிறோம்.

சகலவிதமான
மோட்டார் சயிக்கிள்
திருத்த வேலைகளும்

கேற், கிறில் வகைகளும்
பூட்டு, பிணையல் வகைகளும்

மற்றும் சகலவிதமான
இரும்பு வேலைகளும்
செய்பவர்கள்.

சந்திரன்
மோட்டோ வேக்ஸ்

கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

காமாட்சியம்பாள் சனசமூக நிலையம் கொண்டாடும்
வெள்ளி விழாவை வாழ்த்துகிறோம்.

★ களியாட்டு விழா

★ திருவிழா

★ திருமண விழா

மற்றும் எந்தவித விழாக்களுக்கும்

சிறந்த ஒளியை செய்துகொடுப்பவர்கள்

★ கமலா லைற் ★

நீர்வேலி வடக்கு

உரிமையாளர் : சி. அப்பாத்துரை

வெள்ளி விழாக்காணும் காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்திற்கு
எமது நல்வாழ்த்துக்கள் !

உள்ளூர் விளைபொருள் கமிஷன்
விற்பனையாளர்கள்.

கே. வி. எஸ். அன் கோ

4-ம் குறுக்குத்தெரு, கொழும்பு 11.

# நீதி கேட்கின்றோம் . . .

புதுவை இரத்தினதுரை

பெரும்மலைகள் குடைந்தெடுத்துப் பாதை செய்தோம்
    பெரியஇருட் காடுகளை வெட்டிச் சாய்த்து
கரும்புவயல், தேயிலை றபர்த்தோட்டம் தந்தோம்
    காலைமுதல் உலைக்களத்தில் நெருப்புத் தின்று
இரும்படித்தோம், ஆயுதங்கள் செய்தும் தந்தோம்
    இங்கினிமேற் பொன்கொளிக்கச் செய்யவெண்ணி
அரும்புகின்ற வியர்வையினை நீராய்ப் பாச்சி
    ஆலைகளில் நின்றுழைத்தோம், என்ன கண்டோம் ?

கடலோடி மீன்கொண்டோம், பனையி லேறிக்
    கள்ளுடனே பதனீரும் வடித்துத் தந்தோம்
உடலோடி மூச்சடக்கி முத்துக் கொண்டோம்
    உயிரோடு விளையாடும் தொழில்கள் செய்தோம்
வடகோடி தென்கோடி என்ற, வைய
    வரம்புகளை இணைப்பதற்கு விண்ணிற் பாய்ந்தோம்
திடமோடி இத்தனையும் செய்த எங்கள்
    திருக்கூட்டம் முடிவினிலே . . . என்ன கண்டோம் ?

கொட்டுபனிக் காலையிலும் மலையி லேறிக்
    கொழுந் தெடுத்தோம், ரத்தமதை உறிஞ்சுகின்ற
அட்டையது கடித்திடவும் றப்பர்த் தோட்ட
    ஆலைகளில் நின்றுழைத்தோம், கைகள் சோரக்
கெட்டெடுத்தோம் உங்களது மலத்தைக் கூட
    கேவலமென் றெண்ணாது அள்ளிச் சென்றோம்
சட்டமென நீர்வகுத்த எல்லைக் குள்ளே
    சரீரத்தைப் பிழிந்தெடுத்தோம், என்ன கண்டோம் ?

எங்களுக்காய்ப் பேசவெனக் கொழும்பு சென்ற
    எல்லோரும் காலிமுக வாடி வீட்டில் . . .
தங்களுக்காய்ப் பேசியதும், கறுவாக் காட்டில்
    தாமிருக்கப் பார்த்ததுவும், சுரண்டிச் சேர்த்து
வங்கிகளிற் போட்டதுவும், மாநா டென்று
    வல்லரசு நாடுகளிற் கூடிப் பேசிக்
கும்பலிலே . . . கோவிந்தா போட்ட தன்றிக்
    கொழும்பினுக்குப் போய்வருவோர் என்ன கண்டார் ?

வெள்ளையர்கள் வந்தெம்மை ஆண்ட போது
விருப்புடனே நீங்களவர் மதத்திற் சேர்ந்து
அள்ளியள்ளிப் பணம் சேர்க்கும் எண்ணத்தாலே
அவர்மொழியைக் கற்று "டடி, மம்மி" யென்று
தெள்ளுதமிழ் மறந்திட்ட போதும், நாங்கள்
தேவாரம் மறக்காது கோயிலெல்லாம்
துள்ளி வெளி வீதியிலே . . . மேளம் தட்டித்
திரிந்தோமே, அதனாலோ . . . தாழ்ந்தசாதி ?

துள்ளிவரும் புயல்காற்று நாளிற் கூட
துணிவுடனே நாங்களுயர் மரத்தி லேறிக்
கள்ளிறக்கி உங்களது தாகம் தீர்த்தோம்
கருப்பனியில் . . . பனங்கட்டி வெல்லம் தந்தோம்
சொல்லரிய வேலையெல்லாம் சேவையென்று
செய்தோமே, அதனாலோ எம்மை நீங்கள்
தள்ளிவைத்தீர். இப்பொழுதெம் நீதிகேட்டோம்
தாழ்ந்தவரா என்றெமது நியாயம் கேட்டோம்.

மூன்றடுக்கு மாளிகையில் நிலவு முற்றம்
முற்றத்திற் பூந்தோட்டம். அழகு நாய்கள்
ஈன்றெடுத்த பிள்ளையினுக் கமுது ஊட்ட
எத்தனையோ ஆயாக்கள், உமது செல்வம்
தின்கொடுக்க வக்கின்றி எமது வீட்டில்
திகைக்கின்ற தாய்மார்க்கு எலும்புக் கூடாய்
பேன் குடிக்கும் அளவினதும் ரத்த மின்றிப்
பிறக்கின்ற பிள்ளைகளே எமது செல்வம்.

புள்ளடிகள் போடுகின்ற தேர்தல் ஜாலப்
பொய்த்திரைக்குள் நாங்களினி மயங்க மாட்டோம்
மெல்லவரும் என்றுரைத்து எம்மைத் தின்னும்
முதலைகளை அறிந்ததினாற் சோரம் போகோம்
கள்ளர்களைக் காலிமுகத் திடலி லுள்ள
கட்டிடத்துள் இனிமேலும் அனுப்ப மாட்டோம்
கொள்ளியினை நாமெடுத்தோம், எம்மைத் தின்னும்
கொடியவரின் கோட்டைகளிற் சொருகப் போறோம்.

நீதியினைக் கேட்கின்றோம், நியாயம் சொல்லும்
நெஞ்சினிலே கைவைத்து உண்மை பேசும்
ஆதியிலே "வர்க்கமுரண்" இல்லாப் போதில்
அனைவருமே சமமென்று இருந்த துண்டு
பாதியிலே வந்ததுதான் இந்தப் பேதப்
பாழ்முறைகள், ஆதலினால் . . . அவற்றைக் கொல்ல
நீதியினைக் கேட்கின்றோம், நாளை யெங்கள்
நியாயமதைப் புரட்சியினால் வென்றும் கொள்வோம்.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்
வெள்ளி விழாவுக்கு எமது ஸ்தாபனத்தின் நல்வாழ்த்துக்கள் !

சகலவிதமான வெல்டிங் வேலைகள், நவீன முறையில் கேற், கிறில்
பூட்டு வகைகள், கமக்காரர்களுக்குரிய மண்வெட்டி, மெசின் றிப்பியர்
வேலைகளும், லொறி, ரைக்டர் வேலைகளும், பொலிடோல்
பம் றிப்பயர் வேலைகளும், குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

## என். எஸ். ஆர். என்ஜினியரிங் வேக்ஸ்

புன்னாலைக்கட்டுவன் சந்தி, புன்னாலைக்கட்டுவன்.

உரிமையாளர்: N. சின்னராசா (சுந்தரலிங்கம்)

---

வாழ்க ! வளர்க !! பல்லாண்டு !!!

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையம்

நிலையத்தின் வெள்ளி விழாவுக்கு எமது நல்லாசிகள்

## சுபேந்திரா சவுண்ட் சேவீஸ்

## புத்தூர்

விபரங்களுக்கு: S. செல்வம்
புத்தூர் மேற்கு, புத்தூர்.

கிளை:
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலைய
வெள்ளி விழாவிற்கு எமது
நல்வாழ்த்துக்கள்.

# வெலிகம ஸ்ரோர்ஸ்

உள்ளூர் விளைபொருள் கமிசன் விற்பனையாளர்கள்

139, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.

தொலைபேசி: **23271**

காமாட்சியம்பாள் சனசமூக

நிலையத்திற்கு

எமது நல்வாழ்த்துக்கள்.



# UNITED
# Farmers Corporation

**2/3, Stanley Road,**

**Jaffna.**

# நற்நாட்டுக் கலை-இலக்கியத்தின் இன்றைய தேவை என்ன?

— பொன் - தர்மலிங்கம் —

கலையைப்பற்றிக் கூறும்போது அது ஒரு அழகான, மென்மையான அறிவைத் தூண்டுவதானதாக இருக்குமென்றெல்லாம் அடுக்கிக்கொண்டு போகலாம். ஆனால், அந்தக் கலைகள் இன்று அநாதரவாய், அறிவைக் கெடுப்பவையாய், பயங்கரமாய் உருவாகியுள்ளதைப் பார்க்கும்போது மிகமிக வேதனையாகத்தான் இருக்கின்றது. ஆய கலைகள் அறுபத்துநான்கு என பெரும்புலவர் கூறிவிட்டபோதும், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றிய மூத்த தமிழை மூன்று கலைப்பிரிவாகத்தான் பிரித்துள்ளனர் முன்னோர். அவை இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ். அதற்குக் காரணம், இம்மூன்றின் மூலம்தான் தமிழ் ஒலிவடிவைப் பெறமுடிகிறது. இந்த மூன்றின் மூலமும் மக்களுக்கு அறிவை ஆனந்தத்தைக் கொடுக்க முடியும். அதாவது மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்றனர். ஆனால், இவை எந்தெந்த வகையில் எப்பேர்ப்பட்டவர்க்கு உறுதுணையானதென்பதை வடமொழியில் இன்னும் தெளிவாகக் கூறியுள்ளார்கள். அதாவது, இயல் என்பதை ''பிரபுத்துவ சம்மிதம்'' என்றும், இசை என்பதை ''சுகுண சம்மிதம்'' என்றும், நாடகம் என்பது ''காந்தார சம்மிதம்'' என்றும் கூறியுள்ளார்கள்.

'பிரபுத்துவ சம்மிதம்' எனப்படும் இயற்றமிழ் அதாவது பேச்சுத்தமிழ் பிரபுக்களுக்கு, பெரிய மனிதர்கட்கு உரியது. அவர்கள் வாயளவில் அளந்துவிட்டு செயலில் எதையும் செய்ய முடியாமல் இருப்பது போன்றது.

'சுகுண சம்மிதம்' என்னும் இசைத் தமிழ் ஒரு நண்பன் இன்னொரு நண்பனுக்கு எப்படி இதமாக எடுத்துக்கூறுவானோ அப்படி ஒரு விடயத்தை எடுத்துக்கூற உதவுவது.

'காந்தார சம்மிதம்' எனப்படும் நாடகத் தமிழ் என்பது முன்னைய இரு பகுதியும் இணைந்ததே! அது ஒரு பெண்ணானவள் தன் கணவனுக்கு படுக்கையில் எவ்வளவு அன்பாகவும், ஆதரவாகவும், சாதுரியமாகவும் ஒரு விடயத்தை எடுத்துக்கூறுவாளோ அப்படி விடயத்தை மக்களுக்குக் கூறிச் சேவை செய்யக் கூடியது.

மக்களுக்குச் சேவை செய்யக் கூடிய அந்த நாடகத் தமிழ் — அதாவது நாடகக் கலை, இன்று மக்களுக்கு சேவை செய்ய முடியாத அளவுக்கு சீரழிந்துவிட்டது என்றால் அதன் காரணமென்ன? அதற்குக் கால வளர்ச்சி போதாதா? இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக உருவான தமிழ் நாடகக்கலை வளர்ச்சியடையக் காலம் போதாது எனக் கூற முடியுமா? ஒரு நூறு வருடத்துக்கு முன்னால் தோன்றிய சிங்கள நாடகக் கலை இன்று பெருமைக்குரியதாய் பிற நாட்டினர் போற்றக்கூடியதாய் உருவாகியுள்ளதே! இது எதனால்? இதற்கான பதில்கள் இரண்டு:

(1) மக்கள் மத்தியில் இருந்து மக்களுக்காகக் கலைப் படைப்புகள் படைக்கப்படவில்லை.

(2) அந்நியக் குப்பைக் கலைகள் (கீழ்த்தரமான உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய திரைப்படங்கள், பத்திரிகைகள், ''பொப்'' போன்ற, ''காபரே'' போன்ற மேற்கத்திய இசை, நடன வடிவங்கள் இங்கு வந்து எம்மவரின் சிந்தனைகளை அமுக்காக்கிவிட்டன.

என்ன இது? பண்டைய நாடகமாகிய ''சாகுந்தலத்தில்'' இருந்து இன்றைய நாடகமான ''ஒரு மனிதன் இரு உலகம்''

வரை படைக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நாடகங்களில் ஒன்றுகூடவா மக்களுக்காகப் படைக்கப்படவில்லை ? என எண்ணுகிறீர்கள் அப்படித்தானே! அதற்குப் பதில் நிச்சயமாக எவையுமே இல்லை.

இனிக் கலையைப்பற்றிப் பார்ப்போம். கலை என்பது எதற்காக? அதற்கான பதில்கள் மூன்று.

(1) தொழிலுக்காக.

(2) கலைக்காக.

(3) மக்களுக்காக.

உணர்வுகளின் வெளிப்பாடுகளான கலைக்கான இம்மூன்று பதில்களையும் உணர்வின் வெளிப்பாடுஅற்ற மூன்று மரங்களுக்கு ஒப்பிடலாம். அவை: (1) வாழைமரம், (2) பனைமரம், (3) ஆலமரம்.

இனி ஒவ்வொன்ருகப் பார்ப்போம். முதலாவது பதிலான 'கலை தொழிலுக்காக' என்பதைப் பார்க்கும்போது, தற்போது நமக்குக் கிடைக்கும் கலைகள் யாவும் அதற்குள்ளேயே அடங்கிவிடுகின்றது. அதாவது இங்கு உருவாகும் அநேகமான நாடகங்கள், சினிமாக்கள், பத்திரிகைகளோ அல்லது வெளியில் இருந்து இறக்குமதியாகும் கலைப் படைப்புகள் எனக் கூறப்படும் மேற்கூறிய அம்சங்களோ எல்லாமே கலை தொழிலுக்காக என்பதையே பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

தொழிலுக்காக உருவாகும் கலை குறிப்பிட்டவர்களின் கட்டுப்பாட்டிற்குள் வளர்ந்து பார்வைக்கு அழகானதாயும், சுவையானதாயும் கனிகளைக் கொடுத்து வளர்ப்பவனை வசதி படைத்தவனுக்கும் வாழைக்குச் சரியானதென்பது, இன்று இறக்குமதியாகும் பத்திரிகை, திரைப்படங்கள் என்பவற்றில் காணக்கூடியதாய் உள்ளது. பலப்பல வண்ணங்களைத் தோய்த்து பலப்பல சுவைகளைப் புகுத்தி விற்பனைக்கு விட்டுப் பணம் பண்ணிக்கொண்டிருக்கின்றனர். இதனுல் மக்களுக்கு ஏதாவது உபயோகம் உண்டாவெனப் பார்த்தால், எதுவுமே இல்லை! பதிலாக உணர்வுகள் சீறிப் பாய்ந்து உரிமைக்காகப் போராடவேண்டிய வயதுடைய இளைஞர்கள் எண்ணிக்கையில் கூடிவிட்ட இந்நாட்டில் உணர்ச்சிப் போராட்டம், உரிமைப் போராட்டம் வெடித்துச் சிதருமல், காம உணர்ச்சியைச் சிந்திச் சீரழிந்துகொண்டிருக்கின்ருர்கள். இளைஞர்கள் நாட்டின் பாதையையே மாற்ற வல்ல இளைஞர்களின் பாதையைத் திருப்புவதில் நம் அரசு எந்தளவு தூரம் ஊக்கமளிக்கின்றது என்பதன் நிர்வாண உண்மைகள் தான் 'ஐடியல் மரேஜ்', 'எனது பிள்ளைக்கு எப்படி எடுத்துரைப்பேன்', '99 பெண்கள்' போன்ற ஆபாசத் திரைப்படங்கள் இப்படிக் கலையைத் தொழிலாக்குபவர்களுக்கு நம் அரசாங்கம் ஏன் ஆதரவு காட்டுகிறது ? காரணம்—?

அதுவும் ஒரு முதலாளிவர்க்கக் கும்பலின் ஒரு பகுதி என்பதுதான். அதனுல் தான் அந்நிய முதலாளிவர்க்கத்தின் சுரண்டல் தனத்திற்கு இந்நாட்டு ஆளும் சுரண்டல் கும்பல் ஆதரவளிக்கிறது!

அடுத்த பதில் கலை கலைக்காக என்பது! இதில் அளவுக்கு மீறிவிட்ட உணர்ச்சியின் வேகம்தான் பிரதிபலிக்கிறது. இது கண்ணை மூடிக்கொண்டு கால்போனபோக்கில் செல்பவன் கல்லின்மேல் இடறிக் குப்புற விழுவதற்கு ஒப்பானது. இன்றைய நம் நாடக வளர்ச்சியில் ஒருசாராரின் நிலை இதுதான். புதுமை, முற்போக்கு எனக் கூறிக்கொண்டு நாடகக்கலையை அதீத வேகத்துடன் முன்னெடுத்துச் செல்லுவதாக எண்ணிக் கொண்டு பல புதிய உத்திகளை, தந்திரங்களை, அமைப்புகளை (செற்றிங்ஸ்) புகுத்தி அதிகமாகச் செலவுசெய்து நாடகங்களை உருவாக்குகின்றனர். இது அவர்களின் ஆத்மீக ரீதியிலும் வெளிப்படையிலும் ஓரளவு வளர்ச்சியுடையதுபோல்தான் தெரிகிறது. ஆனுல், இது மக்களை வெறும் பார்வையாளர்களாய்க் கருதித் தங்களை உயர்மட்டமாய்க் கருதி (அதுகூட மிதமிஞ்சிய உணர்வுகளின் வேகம்தான்) கலையை உயர் நிலைக்குக் கொண்டுசெல்ல முயலும் கண்மூடித்தனமாகும். ஆனுல், இது அவர்களுக்கு ஓர்அளவு வெற்றியைஅளிக்கிறது(?) அது—

கவர்ச்சியை, புதுமையை விரும்பும் ஒரு சில பகுதியினரிடமிருந்து — பெரும்பான்மை மக்களுக்கு இது உதவாததாகவே அமைந்து விடுகிறது. அந்தக் குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்குக்கூட — குறிப்பிட்ட சில காலம்

வரைதான் அது நினைவில் தங்குகிறது. பின் இன்னொன்று உதயமாகும்போது முன்னது நினைவிலிருந்து மறைந்து காலத்தின் பிடிக்குள் காவு கொடுக்கப்பட்டுவிடுகிறது. ஆக இது மொத்தத்தில் மக்களுக்கு உபயோக மில்லாத ஒன்றாகவே அமைந்துவிடுகிறது. ஆனல், இது முன்னையதைப் பார்க்கிலும் கொஞ்சம் பரவாயில்லை! அதனல் இது குறிப்பிட்ட காலத்தில் திடு திடு வென வளர்ந்து மக்களுக்கு ஓரளவு பலனை (?) அளித்துத் திடீரெனப் புயலில் முறிந்து வீழ்ந்துவிடும் பனைக்கு ஒப்பாகிவிடுகிறது.

அடுத்தது 'கலை மக்களுக்காக!' மக்கள் மத்தியிலிருந்து மக்களுக்காகப் படைக்கப் படும் கலைதான் காலத்தால் அழியாமல் நீண்ட வேர் ஓடி நெடுவிழுது பலவோடி ஆலமரமாய் பலநூறுஆண்டுகளுக்கு நிலைத் திருக்கும். என்ன இது? மக்கள் மத்தியி லிருந்து மக்களுக்காகத்தானே கலையை நாம் உருவாக்குகிறேம் என நீங்கள் எண்ணலாம். அது தப்பு! இன்றைக்கு நம் நாட்டில் உரு வாகும் கலைப் படைப்புகள் அத்தனையும் அந்நியநாட்டுப் பிற்போக்குக் கலைகளின் பிரதிபலிப்பே! அவை நம் சிந்தனையில் நிறைந்து, உணர்வுகளைப் பாதிக்கின்ற அள விற்கு முன்னேறியுள்ளன. அதற்கு உதா ரணமானவற்றில் ஒன்று, நம் கலைப்படைப்பு களில் பெரும்பாலானவற்றில் அயல்நாட் டுப் பேச்சுத்தமிழ் (இந்தியன்டோன்) இல் லாதவை ஒன்றுகூடக் கிடையாது.

இந்த இடத்தில் ஏன் நம் பேச்சுத்தமி ழையே அடிப்படையாகக் கொண்ட அதா வது, யாழ்ப்பாணத்தமிழை அடிப்படையா கக்கொண்ட ''புளுகர் பொன்னையா''வோ அல்லது ''வெளிக்கிடு விசுவமடுவுக்கோ'' அல்லது அதுபோன்ற வேறுபல நகைச்சுவை நாடகங்களோ இல்லையா எனக்கேட்கலாம். நிச்சயமாய் அவைகளில்கூட முழுக்கமுழுக்க எம்நாட்டு மண்வாடை இல்லவே இல்லை. அயல்நாட்டின் தமிழ் வாடை அங்கங்கே வீசத்தான் செய்கிறது! பெரும்பகுதி யாழ்ப்பாணத்தமிழில் இருப்பதால்தான் மக்களிடம் அவை ஒரு கவர்ச்சியையும் உண்டுபண்ணியுள்ளன. இப்படிப்பட்ட நாடகங்கள்தான் நான் மேலே குறிப்பிட்ட இரண்டாவது வகையைச் சேர்ந்த (கலை கலைக்காக) வையாகும். ஆனல், ஒரு நாட கம் மக்களுக்காகப் படைக்கப்படுவதாயிருந் தால் அது வெறும் பேச்சுத்தமிழ் மட்டும் மக்கள் மத்தியிலிருந்து எடுத்து, அவர்களுக் குத் தேவையான அவர்களின் பிரச்சனைகளை எடுக்காமல்விட்டால் அது எப்படி மக்களுக் காகப் படைக்கப்படும் கலையாக முடியும்? அதை எப்படி மக்கள் ஏற்றுக்கொள்ள முடி யும்? நம்நாட்டுப் பேச்சுத்தமிழில் உருவான நாடகங்கள் மக்களிடம் ஆதரவைப் பெற்று அவர்கள் கருத்துக்களைக் கவரும் விதத்தில் அமையாத காரணம் அவர்களுக்குத் தேவை யான அவர்களின் அடிப்படைப் பிரச்சினை களை எந்த ஒரு நாடகாசிரியனும் அலசி ஆராயாததே!

அப்போ சரியான கலைப் படைப்புகள் எப்படியிருக்கவேண்டும்? இப்போதுதான் நாம் தேவையான கேள்விக்கு வந்திருக் கிறேம். அந்தந்த நாட்டு மக்களின் கலா சாரத்துடன் பிணைந்ததான, அவர்களின் பிரச்சினைகளை முன்னெடுப்பதான அவற்றிற் குத் தீர்வுகாட்டி அவர்களின் வாழ்க்கைக்கு ஒளிகொடுப்பதான முற்போக்குக் கருத்துக் களைக்கொண்ட நாடகங்களையே படைக்க வேண்டும். முற்போக்குக் கருத்துக்கள் எனக் கூறும்போது அவை எவை என்பதும் ஒரு கேள்வி(?) காரணம் முற்போக்கு எனக் கூறிக்கொண்டு பிற்போக்குச் செய்கைகளைச் செய்து குழப்பியடிக்கும் இந்நாளில் முற் போக்கு என்பதைக்கூட நாம் சரியாக ஆராய்ந்துதான் செயல்படவேண்டும். அந்தச் சரியான கருத்துக்களை நாம் எப்படி எடுத்துக்கொள்ளவேண்டும். மக்களின் மத்தியிலிருந்து மக்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தத்துவார்த்த ரீதியில் ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான வழி முறைகளையும் உணர்ந்துகொண்டு அதன் பின் அவர்களின் பிரச்சினைக்குக் கலைவடிவம் கொடுத்து அவர்கள்முன் படைக்கும்போது தான் மக்கள் கலையில் ஓர் பிடிப்படைவார் கள். அதனல் தம் வேதனைகளின் மூலகர்த் தாக்கள் யார் என்பதை உணர்ந்து கொதிப் பும் அடைந்தார்கள். அந்தக் கலைதான் நல்லதோர் சமுதாயத்தை உருவாக்குவது மட்டுமல்ல, அவர்களின் இதயங்களில் நிறைந்து காலங்காலமாய் அழியாமல் நிலைத்தும் நிற்கின்றன.

முற்போக்கு எண்ணம் கொண்ட கலை ஞர்கள் மக்களின் பிரச்சனையைத்தானே

கையாளுகிறார்கள் என எண்ணலாம். ஒரு சிலர் கையாளுகிறார்கள்தான். ஆனால் எப்படிக் கையாளுகிறார்கள்? தத்துவார்த்த ரீதியில் ஆராய்ந்து அதற்கான சரியான முடிவை எடுத்துக்கொள்ளாமல் மேற்போக்காகப் பிரச்சனைகளைக் கூறி மழுப்பிஅடித்து விடுகிறார்கள். மக்களின் ஆதாரசுருதியான அடிப்படைக் காரணங்களை காட்ட, தெளிவு படுத்த மறந்துவிடுகிறார்கள். இது எப்படியென்பதை ஒரு கதையை எடுத்துஆராய்ந்து பார்ப்போம். இந்தக் கதை முற்போக்கானது எனக் கூறமுடியாது. ஆனால், இதே ரீதியில் இருப்பவற்றைத்தான் முற்போக்கு என்கிறீர்கள். இது எந்த முற்போக்கோ புரியவில்லை. கதையைப் பார்ப்போம்.

''ஒரு பணக்கார வீடு. தந்தையும் மகனும், வீட்டுவேலைகளைச் செய்வதற்காக ஒரு வேலைக்காரப் பெண்! சிறு வயதிலேயே வேலைக்கு அமர்த்தப்பட்டவள். பார்வைக்கு அழகானவள். பருவம் அவள் அழகில் மயங்கி அவளை நாட அவள் பூத்துக்குலுங்குகிறாள். பணக்காரப் பையன் இரக்கநெஞ்சு கொண்டவன். அவள்மேல் ஆரம்பத்தில் இருந்தே இரக்கம் காட்டுபவன். அவளைப் பருவம் அழைத்தபின் அவன் இரக்கம் காதலாய் மாறுகிறது. மனைவியை இழந்த பணக்காரத் தந்தைக்கு அவள் அழகு மயக்கத்தைக் கொடுக்கிறது. மது வெறியில் ஒரு நாள் அந்தப் பருவப் பாவையைப் பலாத்காரமாகப் பருகிவிடுகிறார். பதைத்துத் துடிக்கும் பாவையின் பரிதாபத்துக்குரிய காரணத்தை புரியாத நிலையில் அவளைத் திருமணம் செய்வதாக வாக்குக் கொடுக்கிறான் மகன். அதை அறிந்த பணக்காரத் தந்தை விஷயம் முற்றுமற தடுக்க அவளுக்கு உணவில் விஷம் வைக்கிறான். எதிர்பாராமல் அந்த உணவை மகன் உண்டு மாய்ந்துவிடுகிறான். தன்வினை தன்னைச் சுட்டதால் தடுமாறும் தந்தை தன்னையே மாய்த்துக்கொள்கிறான். பாவை பட்டமரம் ஆகிறாள்.''

கதை இவ்வளவில் முடிந்தோ அல்லது மேற்கொண்டு முடிவை மாற்றித் தொடர்ந்தோ போகலாம். அது அவரவர் இஷ்டம். இப்போ எங்களுக்குத் தேவை ஆராய்வதற்கு ஒரு கதை. இதை இவ்வளவில் வைத்து ஆராய்வோம். இதில் அனுதாபத்துக்குரிய பாத்திரம் அந்தப் பெண். ஆரம்பத்தில் அநாதரவாய் வந்த பெண். முடிவிலும் அநாதரவாய் விடப்படுகிறாள். அதனால் அவளின் பாத்திரம் மக்களைக் கவரக்கூடியதாக இருக்கிறது. அதிற்தான் உண்மையும் இருக்கிறது. அவள் அநாதரவானவள் என்பதற்காக மக்களிடம் ஆதரவைப் பெற முடியாது. அந்தப் பாத்திரம் அடக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்களில் ஓர் அங்கம் என்பதால் அவள் விரும்பப்படுகிறாள். உண்மையும் அதுதான். ஆனாலும் இந்த நாடகமும் வெற்றியடைய முடியாததிற்குக் காரணம் என்ன? சரியான கருத்துக்களைக்கொண்டு மக்கள் மத்தியில் இருந்து உருவாக்கப்பட்ட பாத்திரம் ஆரம்பத்திலேயே திசை திருப்பப்பட்டுக் கதை வழமைபோல் அமைந்துவிடுகிறது. அதனுற்றான் அது வெற்றியடைய முடியாமல் போய்விடுகிறது. அவளைப் பிரச்சனைக்குரியவளாக்கிவிட்டு அவளது அடிப்படைப் பிரச்சனையை ஆராயாமல் கதை எங்கேயோ சென்றுவிடுகிறது.

சிறுவயதிலேயே அந்தப் பெண் வேலைக்குப் போக வேண்டிய நிர்ப்பந்தம் என்ன? அவர்களின் துன்பங்களின் அளவென்ன? இந்த அடிப்படைக் கேள்விகளைப் பாத்திரத்திலிருந்து அப்புறப்படுத்திவிட்டு ஏதோ விதமாய்க் கதையைச் சோடித்துவிடுகிறார்கள். அதனாலேயே மக்களின் மனதில் இருந்து விலகிச் செல்கிறார்கள். மேற்கூறிய கேள்விகளை முன்னெடுத்துக் கலை படைக்கும் போது அது மக்களுக்குரிய — அவர்களுக்குப் பிடித்தமான கதையாகி விடுகிறது. காரணம், நம் நாட்டில் பெரும்பான்மை மகக்கள் சுரண்டப்பட்டு, அடக்கி ஒடுக்கப்பட்டு வாழும் தொழிலாள விவசாயிகளாய் இருப்பதால், மேற்கூறிய கேள்விகள் இன்றைய எல்லோரது சிந்தனைகளிலும் சுழன்றுகொண்டிருக்கின்றன. அதனால் அந்தப் பிரச்சனைகளை முன்னெடுக்கும்போது அதற்குரிய காரணத்தைப் புரியவைக்கும்போது, அதைத் தீர்க்க அவர்களுக்கு வழியைக் காட்டும் போது அவர்கள் இதயத்தில் அது ஆழமாகப் பதிந்துவிடுசிறது. அது அப்படியே நிலைத்து விடுகிறது. காலங்கள் அழிந்து, மனிதர் அழிந்தாலும் அந்தக் கலைப் படைப்புகள் தான் உயிருடன் நிலைபெற்று வாழ்கின்றன.

ஆகவே, மக்களுக்குத் தேவையான கலைப் படைப்பைப் படைக்க விரும்பினால்,

அவர்களுக்குச் சேவை செய்ய விரும்பினுல், அவர்களின் பிரச்சனேகளே அணுகி அவற்றினை மையமாகக் கொண்டு நாடகங்களே ஆக்குங்கள். அப்பிரச்சனேகளேத் தீர்ப்பதற்கான வழிகளேக் கூறி அவற்றை முழுமையான கலேவடிவங்கள் ஆக்குங்கள்.

இதில் இன்னென்றை முக்கியமாகக் கவனத்தில் எடுக்கவேண்டும். நாடகம் (Drama) என்பது எப்போ உருவாகியது? அதன் வளர்ச்சி, பண்பு, பயன் என்பவற்றையும் அறியவேண்டும். மேலே ஓர் இடத்திற் கூறியதுபோல் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு இது தோன்றியது எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. ஆனுல், ஆரம்ப காலங்களில் வளர்ந்து வந்தவை இயல் தன்மை பேச்சுவழக்கு) நிறைந்தவை அல்ல. அன்றைய கலேவடிவங்கள் இசையும், ஆடலும், பாடலும் இடையிடை வசனமும் கொண்டவைதான் எம் கலே வடிவங்கள். ஆனுல், மேல்நாட்டவர் வருகையால், இந்திய சினிமாக் குப்பைகளின் ஆக்கிரமிப்பால் அத்தகைய கலே வடிவங்களேக் காண்பதே அரிதாக உள்ளது. ஆனுல், மரபுவழிக் கூத்துகளாக ஆங்காங்கே நடித்து வரும் காத்தவராயன், கண்டியரசன், பூதத்தம்பி, சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயானகாண்டம் போன்றனவும், மட்டக்களப்புப்பகுதியில் நடித்துவரும் வடமோடி, தென்மோடி நாடகங்களான நொண்டி நாடகம், இராவணேசன், கர்ணன் போர் போன்றனவும் மக்களால் போற்றப்படுவனவாக உள்ளன.

இன்று இத்தகைய மரபுவழிக் கூத்தின் இசை, ஆடல் வகைகளேப் பயன்படுத்தி நவீன கருத்துக்களேக் கூறுவதற்கு ''கந்தன் கருணே'', ''சங்காரம்'' போன்ற புதிய கூத்துவகை நாடகங்களேத் தற்போது மேடையேற்றி வருவது மக்களின் பேராதரவைப் பெற்றுள்ளதோடு அவை மக்களின் மனதைப் பிணித்து நெடுங்காலம் நிலேத்து நிற்கும் ஆற்றலேயும் பெற்றுள்ளன.

எனவே, இடையில் தேங்கிவிட்ட மரபுவழி நாடகங்களே — கூத்துகளே அழியவிடாது அவற்றுக்குப் புதுமெருகூட்டவேண்டும். மக்களுக்குப் பயன்படக்கூடிய கலே இலக்கிய வடிவங்களே ஆக்கவேண்டும். இவ் இரண்டு கடமைகளும் மிக முக்கியமான பணிகளாக இன்றைய கலேஞனுக்கு உள்ளன. இந்த முயற்சிக்கு வழிகாட்டியாகவே ''நெல்லியடி — அம்பலத்தாடிகள்'' மரபுவழிவந்த காத்தான் கூத்தின் இசைகள் — ஆடல்கள் — மெட்டுகளேப் பயன்படுத்தி நவீன சமுதாயப் பிரச்சனேயைக் கூற — அதற்குச் சரியான ஒரு மார்க்கத்தைக் காட்ட உருவாக்கிய 'கந்தன் கருணே' என்னும் நாடகம் உள்ளது.

இதேபோன்ற இன்னெரு முயற்சியே கொழும்பில் ''நடிகர் ஒன்றியம்'' — மட்டக்களப்பு வடமோடி தென்மோடி மரபில் நடித்த 'கந்தன்கருணே'யும் ஆகும்.

இவ்வாறு கலேவடிவங்கள் மக்கள் பிரச்சனேகளேப் பிரதிபலிப்பனவாகவும், அதன் அடிப்படைக் காரணங்களேத் துலக்குவனவாகவும், அதனேத் தீர்ப்பதற்கான சரியான மார்க்கத்தைக் காட்டுவனவாகவும் மாத்திரம் இருந்து வெறும் சுவர் விளம்பரம்போலில்லாமல் சிறந்த இசை, ஆடல் வகைகளேக் கொண்டு, சிறந்த உத்திகளேப் பயன்படுத்தி முழுமையான கலே வடிவங்களே நம்மவர் ஆக்க முன்வரவேண்டும்.

# இன்பத் தமிழரசு

— அ. பொ. செல்லையா —

நாகரியங்களின் மிகவும் பழைமையானது சிந்துவெளி நாகரீகம். சிந்துவெளி வெளி நாகரீகத்திற்கே தொட்டிலாக அமைந்தது திராவிட நாகரீகம்.

உலகத்தின் ஆதிமனிதன் இந்தியாவின் தென் கோடியில்-இந்து மாவாரியில்-மத்திய ரேகைக்கு அண்மித்த இடங்களில் தோன்றி வாழ்ந்தான் என்பது உயிரியல் பூகோள அறிஞர்கள் கருத்து.

இந்தியாவின் தென் கோடியில் - இன்றுள்ள தமிழகத்திற்கு 1100 கல் தெற்கே-இந்துமா வாரியில் குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னாடு இருந்தது என்பர் வரலாற்று ஆசிரியர்.

இந்துமா வாரியின் பெரும்பகுதி அன்று தரையாக இருந்தது. அதுவே லெமூரியாக் கண்டமாகும். இந்நிலப் பரப்பில் வாழ்ந்தவர்களே கடல் கோளுக்கு முன் வாழ்ந்த பழந் தமிழ் மக்களாவர். கடலின் பெருக்கத்தால் சிதைந்து, திரைந்து, தெறிந்து தரை மார்க்கமாகச் சென்றவர்களே உலகின் பல்வேறு நாகரிகத்தை உண்டாக்கியவர்களாவார்கள். இவர்களின் வழி வந்தோரே உலக மக்கள் அனைவரும். திரைந்து சென்றவர்களே திரையர். திரையப்பட்ட இனமே திராவிட இனம். இவர்கள் மொழி பண்படாத அல்லது சங்க காலத்தில் செம்மை பெறுவதற்கு முன் பேசிய தமிழ் ஆகும்.

எனவே, எம்மினம் தமிழினம்-ஆதியினம் என்பதில் ஐயத்திற்கிடமில்லை. ஆனல் உலகில் இந்த இனத்திற்கென்ெருரு தனி நாடு இன்றில்லை. என்னே விந்தை!?

இனியும் எமது பழம் பெருமையை உணராது இருக்கலாமா? ஆண்ட இனம் ஆளப்படுகிறது என்பதை மறக்கலாமா? எந்த ஓர் ஆரிய மன்னனும் நம்மை வென்றது பழைய வரலாற்றில் இல்லை. ஆனல் ஆரிய பரம்பரையினர் இன்று எம்மை ஆளுகின்றனர். தமிழர் சரித்திரத்திலே இது கரைபடிந்த காலம். இந்த நிலை இன்னும் நீடிக்க வேண்டுமா? எம்மைவிட எத்தனையோ மடங்கு சிறிய நாடுகள் சுதந்திரமாக வாழ்கின்றனவே! எமக்கு மட்டும் என்ன கேடா? நாமும் சுதந்திரமுள்ளவர்களாக ஏன் வாழக்கூடாது? மரந்தாவும் மந்திக்குள்ள சுதந்திரம், காட்டில்வாழும் கரடிக்குள்ள சுதந்திரம், வானத்திலே வட்டமிடும் கருக்குருவிக்குள்ள சுதந்திரம் எமக்கில்லையா.

அரசியல் எமக்குப் புதிதா? பொருளாதாரம் எமக்குத் தெரியாதா? நிர்வாகத்தின் அரிச்சுவடியையே எழுதியவர்கள் நாம்தானே! பின் ஏன் தயக்கம்? தடை என்ன இருக்கிறது? இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்கின்ற உணர்வு வரவேண்டாமா?

உணர்வு வருவதற்குச் சில காலத்திற்காவது நம்மை நாமே தியாகஞ் செய்து கொள்ள வேண்டும். நாம் அனுபவிக்கக்கூடிய இன்பங்கள் சிலவற்றை விட்டுவிடத் தயாராக இருக்க வேண்டும்.

எம்மை அடிமையாக-இரண்டாம் இனமாக-எமது மொழியை நமது தாய் மொழியாகக் கருதாது,பெற்ருேர் விரும்பும் கல்வி மொழி-போதன மொழியாகக் கருதிடும் அரசில் கிஞ்சிற்றேனும் சலுகைகளை வழிகளை நாம் எதிர் பாத்திடாத நிலை நம் எல்லோரிடையேயும் வந்திடல் வேண்டும்.

நமது பொருளாதார நிலையை வளர்த்திட வேண்டும்; சிக்கனம் பேண வேண்டும். சுகாதாரத்திற்கு விரோதமானவற்றை அகற்றிட வேண்டும்; ஒழுக்கம், அன்பு, பண்பாடு, கடமை முதலிய நற்குணங்களுடன் தொழில்துறைக் கல்வியும் தாராளமாக நம்மிடையே இருந்திடல் வேண்டும். இத்தகைய இலட்சியங்களுடன் நாம் நமது இலட்சியப் பயணத்தைத்

தொடர்ந்து, எழுச்சி பெறும் நமது உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சியால் உதயமாகும் போராட்டத்தில் கிடைத்திடும் தனியரசு! தமிழரசு!

* * *

மலர வேண்டிய தமிழரசுக்கு வாய்ப்பான திட்டமொன்று கீழே தரப்படுகின்றது. இது செய்ய முடியாததல்ல; ஆனால் செய்யப்படுவதில்லை.

உலக உத்தமர் காந்தியடிகள், அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணா ஆகிய இருவரின் உதயங்களில் உதயமாகிய இலட்சியங்களிலிருந்து பெறப்படுகிறது இத்திட்டம். திட்டம் இதுதான்:-

ஐநூறு ரூபா வருமானமுள்ள ஆயிரம்பேரை நாம் எடுத்துக்கொள்வோம். இந்த ஆயிரவரும் சுகாதாரத்திற்கும், சமயத்திற்கும் விரோதமாக மது, புகைப் பழக்கமுடையவர்கள்.

(1) நாளும் கள்ளுக் குடிப்பார்கள். ஆளுக்கு ஒரு ரூபாவானால் ஓராண்டிற்கு 3,65,00 ரூபா வீணாகிறது.

(2) தினமும் சிகரெட் பிடிக்கிறார்கள் என்றால்-ஆளுக்கு ஒரு ரூபாவானால் ஆண்டுக்கு மீண்டும் 3,65,000 ரூபா புகையாகிறது.

(3) மாதமொரு சாராயப் போத்தல் என்றால்-செலவாகிவிடும் தொகை பத்து ரூபா என வைத்துக் கொண்டால் 1,20,000 ரூபா இல்லாது போகின்றது.

(4) இவற்றோடு நிற்குமா? இதத்தைய 'தமாஷா' செய்பவர்கள் சூதாட்டம், சினிமாப் படம், களியாட்டங்கள் என வீண் செலவுகள் என உத்தேசக்திற்கு 1,50,000ரூபாவை வீணாக்குவார்கள்.

எனவே, ஆயிரம் பேர்-ஐநூறு ரூபா ஊதியம் பெறுபவர்கள்-ஓராண்டில் பத்து லட்ச ரூபாவை வீணாக்குகிறார்கள் என்பதை யாரும் யோசித்ததுண்டா?

பத்து லட்ச ரூபா வென்றால் சமான்யமா? அதுவும் ஓராண்டில்!

இதனை விடுதலைப் போராட்டத்திற்கு நாம் தந்திட முயன்றால் மலர்ந்திடும் இன்பத் தமிழரசு!

---

**காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவிற்கு**

**எமது நல்லாசிகள்!**



# மலாயா கபே

**கிரான்ட் பஜார், — யாழ்ப்பாணம்.**

# சமூகசேவையும் பெண்களும்

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம் அவர்கள்
ஆசிரியை, அத்தியார் இந்துக்கல்லூரி, நீர்வேலி.

சர்வதேச மகளிர் ஆண்டு பிரகடனப் படுத்தப்பட்டுப் பெண்கள் நலனில் யாவரும் அக்கறை கொள்ளுமாறு தூண்டப் படும் இக்காலகட்டத்தில், சமூக சேவையிற் பெண்கள் வகிக்கவேண்டிய பங்கினையும், அவர்கள் ஆற்றவேண்டிய பணிகளையும் ஆராய்வது பொருத்தமானதாகும்.

இந்த நூற்றுண்டில், மகாத்மா காந்தி போன்ற பெரியார்களும், மகா கவி பாரதியார் போன்ற புலவர்களும் பெண்களின் விழிப்புணர்வுக்கு அதிகம் பாடுபட்டிருக்கின்றனர். அவர்களின் தூண்டுதலால் அநேக பாரதப் பெண்மணிகள் வீட்டை விட்டு வெளிவந்து அரசியலிலும் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார்கள். பெண்குலம் தனக்கு விதிக்கப்பட்டிருந்த முறைகேடான கட்டுக்களைத் தகர்த்தெறிந்த அப் பெரியார்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

வேத முடிபுகள் என்றழைக்கப்படும் உப நிஷத்துக்களுள் ஒன்று பெண்மைக்குக் கொடுத்துள்ள சமத்துவத்தைப் பின் வரும் வாக்கியங்கள் புலப்படுத்துகின்றன: ''அவரை விதையின் இரு பருப்புக்களும் ஒன்றுகி இணைந்து காணப்படுவதுபோல ஆண்மை பெண்மையாகி இரு சக்திகளையும் தன்னகத்துக் கொண்டதே ஈசுவர தத்துவம். அத்தகையதே இப்பிரபஞ்சமும் அவரைவிதையின் ஒரு பகுதியை நீக்கி விட்டால் மற்றொன்று முளை கொள்ளாதது போல ஆண்மையைவிட்டுப் பெண்மையைநீக்கி ஆண்மையோ வளர்ச்சியடைவதில்லை. ஒன்றைவிட மற்றது பெரிதென்று மதிப்பது அறியாமையாகும்''. நமது சமுதாயத்தில் இக் கருத்து ஆழமாக வேரூன்றியிருக்கிறது.

சமணம் போன்ற புறச் சமயங்களின் தாக்கத்தால் இடைக்காலத்தில் பெண்மை அவமதிக்கப்பட்டாலும், காலப்போக்கில் தாய் என்ற உயர்ந்த இடத்தில் வைத்துப் பெண்மை மதிக்கப்பட்டது. வேத காலத்தில், கார்க்கி, மைத்திரேயி ஆகிய இரு பெண்மணிகள் ஆத்மீகப்பணி புரிந்ததாகக் குறிக்கப்படுகிறது. இதிகாசங்களில் வீரம்மிக்க சீதை, சாவித்திரி, நலாயினி, திரௌபதி ஆகிய பெண்மணிகள் புகழப்படுகிருர்கள். தமிழிலக்கியங்கள் ஔவையார், ஆதிமந்தியார், காக்கை பாடினியார் போன்ற பெண்களின் சமூக, இலக்கியப்பணிகளைக் குறிப்பிடுகின்றன. சமயப் பணியில் முதலிடம் வகித்த புனிதவதியார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் போன்ற பெண்மணிகள் சேக்கிழார் பெருமானுற் பாராட்டப்பட்டுள்ளனர்.

தமது சமூகத்திற்கும் சமயத்திற்கும் ஆற்ற வேண்டிய பணிகளை ஆடவர்கள் செய்யாது தவறிழைத்தபோதுகூடப் பெண்கள் துணிவுடன் முன்வந்து ஆடவர்களுக்கு நேரவிருந்த அவமானத்தையும் குலப்பழியையும் போக்கினுர்கள். உதாரணத்துக்கு ஒரு சந்தர்ப்பத்தை நினைவு கூரலாம்:-

பாண்டியகுலம் வழிவழியாகச் சைவத்தைப்பேணியகுலம். சௌந்தரமாறன் என்னும் பெயருடன் சிவபரம்பொருளும் உக்கிரப் பெருவழுதியென்னும் பெயருடன் முருகப் பெருமானும் அவதரித்து ஆட்சி புரிந்த குலம் பாண்டியகுலம்; அடியவர்க்காக, 'விண்பழித்து மண்புகுந்து' அதிகமான திருவிளையாடல்களை இறைவன் செய்தது பாண்டியநாட்டிலாகும். அத்தகு தூய்மை பெற்ற பாண்டியகுலம் கூன் பாண்டியன் என்னும் மன்னனுற் குலப்பழியைத் தேடிக்கொண்டது. தான் சமணமதத்தைத் தழுவியும், மக்களைத் தழுவச் செய்தும் தன் குலப் பெருமையை அடகு வைத்துவிட்டான் அம்மன்னன். ஆனுல் அவனை மணந்துகொண்ட சோடி நாட்டு இளவரசி, மங்கையர்க்கரசியார்

சுதையினுலும் அமைக்கப்பட்டனவென்றும் பல்லவ அரசனுகிய முதலாம் மகேந்திர வர்மன் ஆரம்பித்த மகாபலிபுரத்துக் கற் கோயில்களின் பின்பே தமிழ் நாட்டிற் கற் கோபுரங்களும், விமானங்களும் உருவாயின வென்றும் சிற்ப ஆராய்ச்சியாளர் கருதுகின் றனர். சோழர், பாண்டியர், நாயக்க மன் னர்கள் ஆகிய தமிழ் மன்னர்கள் தமிழ்நாட் டுச் சிற்பக்கலையை வளர்த்து ஈழம் போன்ற பிற நாடுகளிலும் அதன் சிறப்பைப் பரப் பினர்.

இந்திய சிற்பி உண்மையில் இயற்கை யின் அழகினைக் காணும் ஆற்றல் வாய்க்கப் பெருதவனல்லன். பிரகிருதிவாதம் (Realism) என்பதற்கு அர்த்தத்தை அவன் கொள்ளாவிடினும் ஐரோப்பிய சிற்பிகளைப் போல இயற்கை ஒழுங்கை அனுசரித்துக் கலைப் பொருள்களை ஆக்கும் திறன் அவ னிடத்தும் உண்டு எனச் சிற்பப் புலவர் இ. பி. ஹவெல் (E. B. Havel) என்பவர் கூறியுள்ளார். இக்கூற்றை மெய்ப்பிக்கிறன தமிழ்நாட்டு மன்னர்களின் பிரதிமை உரு வங்கள். அவற்றுள் தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள இராசஇராச.சோழனினதும் அவனது மனைவியான உலோகமகா தேவி யினதும் செப்புச்சிலைகளும், மகாபலிபுரத்தி லுள்ள சிம்மவிஷ்ணு, முதலாம் மகேந்திர வர்மன், முதலாம் நரசிம்மவர்மன் ஆகியோ ரது உருவங்களும் திருப்பதிக்கோவிலிலுள்ள விஜய நகர அரசர்களாகிய கிருஷ்ண தேவ ராயர், முதலாம் வேங்கடராயர், திருமலை ராயர் முதலியோரது சிற்பங்களும் சிறப் பிடம் பெற்றுள்ளன.

மன்னர்களதும் மக்களினதும் ஆதரவை யும் அரவணைப்பினையும் பெற்றுப் புகழ் பரப்பிய தமிழ்நாட்டுச் சிற்பக்கலை இன்று வளர்ச்சி குன்றித் தத்தளிக்கின்றது. இந் நிலை நீங்கிப் பண்பாட்டின் பண்புகளை முரசொலிக்கும் சிற்பக்கலை முன்போலப் பொலிந்து மிளிர ஆவன செய்வதற்கு மக் களும், மக்கள்தம் தலைவர்களும் முன்வர வேண்டும்.


காமாட்சியம்பாள் சன சமூகநிலையத்தின்

வெள்ளிவிழாவை வாழ்த்துகிறுர்கள்

# சலாம்ஸ்

ரான்ஸ்ஸ்போட் ஏஜன்ட்

95, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 489.

65, டாம் வீதி,
கொழும்பு - 12.
தொலைபேசி: 35509.

# துளிர் விடும் சொந்தங்கள்

பொ. கருணாகரமூர்த்தி
புத்தூர்.

அந்திநேரத்துச் செவ்வானம் நிர்மல மாகக் காட்சியளிக்கிறது. உறைவிடம் தேடி மரங்களை வட்டமிடும் பறவைகளின் ஒலியும், எப்போவாவது ஒரு தரம் சாலே யில் செல்லும் 'லாரி'களின் இரைச்சலும் கிராமத்தின் அமைதியைக் குலேக்கின்றன. இதுவரை என்னிடம் பேசிக் கொண் ருடிந்த ''நல்லேயாப் பத்தர்'' சால்வையை உதறித் தோளில் போட்டுக் கொண்டு எழுந்து போகையில் சொன்ன வசனங்களை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். ''உனது வாழ்க்கை, உனது இஷ்டம், ஏதோ நல்ல முடிவுக்குவா!'' நல்ல என்ற சொல்லில் பிரத்யேக அழுத்தம். மாங் குயில் ஒன்று எங்கிருந்தோ சோகமாகக் கூவுகிறது. என்னுல் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. மனம் நான்கு வருடங்களுக்கு முன் பாய்கிறது. கயிற்றுக் கட்டிலில் உட் கார்ந்து சிந்திக்கிறேன்.

அப்போது என் மடியில் கன மில்லை. உடலேக் கொண்டான உழைப் பில் என்னை நம்பியிருக்கும், அம்மாவின தும், தங்கையினதும் வயிறு கழுவப்படும். உத்தியோகம் கிடைக்கும் என்ற நம்பிக்கை கானல் நீரானபின், என்னுடன் படித்து நல்ல நிலேமையில் இருக்கும் நண்பர்களைப் பார்த்து என்னுல் இது போல் வாழ முடிய வில்லேயே என்று அங்கலாய்ப்பதுண்டு. அப்பா குடியினுல் சீரழிந்து எங்களை இந்த நிலேயில் கொண்டு வந்து விட்டபின் என் தாய் மாமன் இரா சையருக்கோ, அவர் குடும்பத்திற்கோ எங்களிடம் ஒட்டுதல் குறைவு. அவர் ரிடையர் ஆகப் போகும் மராமத்து ஆபீ ஷர். மூத்த மகன் ஜெயராமன் பி. ஏ. பிர பல கம்பனியொன்றின் மனேஜிங் டைரக் டர். அடுத்தவள் விமலாவை வெளி யூரில், மளிகைக்கடை, லாரி என்று வைத் திருக்கும் ஒரு குட்டி முதலாளிக்குக் கட்டிக் கொடுத்திருந்தார்கள். இளையவள் தான் ராஜி. மற்றது இரண்டு பையன்கள். நான் எப்போதாவது அங்கு போனுல் ராஜி மட் டும் ஓடி ஒளிந்து கொள்வாள். வெட்க மாம்! அல்லது எனக்கு அவள் மட்டிலும் தந்து கொண்ட மரியாதையோ தெரியாது.

எங்கள் குடும்ப நண்பரான நல்லேயாப் பத்தர் மட்டும் ஜெயராமனுக்கு என் தங்கை ஜானகியைச் செய்தாலென்ன என்று அடிக்கடி சொல்லுவார். அப்பா வின் மரணச் சடங்கிற்கு மாமா தந்த ஆயிரம் ரூபாவுக்கும் வட்டி கணக்குப் பார்த்து வேண்டிக் கொண்ட அவரின் அருங் குணம் எமக்கல்லவா தெரியும்? பழைய மணியகாரர் வேலுபிள்ளேயின வளவு வேலியை அடைத்துக் கொண்டிருந் தேன், கூலிக்குத்தான். நல்லேயாப்பத்த ருடன் மாமா சைக்கிளேயும் உருட்டிக் கொண்டே சுருட்டைப் புகைத்தபடி சம் பாஷித்துக் கொண்டு வந்தார். ''பாருங்கோ ஆசாரியார் அவனுடை கொழும்பிலே குடும்பம் நடத்திறது என் டால் ஒரு படிச்ச பெண்ணுய் வேணும். வீட்டை வாற பெரியவங்களோடை 'டீசன் ராய்'' புழங்க எடுக்கத் தெரிய வேண் டாம்?'' ''பாவம், தகப்பனில்லாத பிள்ளேயை இப்படி நீங்களும் கைகழுவி விட்டால்?'' ''அதுக்காக......அவன்ரை அந் தஸ்துக்குக் கெட்ட இடத்திலே ஆம்பிள்ளே யைத் தள்ளுறதோ?'' நல்லேயாப்பத்தரும் ஏதோ சொல்கிருர். ஒழுங்கையுள் குரல்கள் தேய்ந்து ஒலிக்கின்றன. பூமியெல்லாம் சுழன்று வானமே பற்றி எரிவதுபோல் இருந்தது!.

என்னதான் போலிச் சமாதானங்கள் செய்து கொண்ட போதிலும் பாதாளத்தி லிருக்கும் என் பொருளாதாரக் கவலே என்னை அடிக்கடி குடைந்தெடுக்கவே செய்தது. அப்பொழுது நான் நிரந்தர மான ஒரு வேலேக்காக அலேந்து திரிந்த போதுதான் நல்லேயாப்பத்தர் மூலம் அந்த

வேணுகோபால் என்ற உத்தமரின் உறவும், அவரின் கீழ் வேலை செய்யும் வாய்ப்பும் கிடைத்தன. கண்ணுடியும், கதருடையும் விபூதிப் பட்டையுமாக வாழ்ந்த அவரின் நகைக் கடையில் என்னை வேலைக்குச் சேர்த்துக் கொண்ட முதல் நாளே போட்டுக் கொண்ட ஒரே கொண்டிஷன் ''நீ எவ்வளவு படித்திருக்கிருய் அல்லது எவ்வளவு வேலை செய்கிருய் என்பது எனக்கு முக்கியமல்ல, கடமையில் எவ்வளவு தூரம் நாணயத்தையும் நேர்மையையும் கடைப்பிடிக்கிருய் என்பது தான் முக்கியம்.'' அவருடன் நான் என்றைக்காவது மனம் கோண நடந்து கொண்டதாக எனக்கு ஞாபகம் இல்லை

அப்பா இல்லாத எனது குறையை நீக்கி வைத்தார் எனலாம். எனது குடும்ப கஸ்டங்களையெல்லாம் அறிந்து வேலைக்குச் சேர்ந்த புதிதில் ஒரு மாதச் சம்பளத்தை இனமாகவே தந்தார் மறுக்க முடியவில்லை. பேச நா எழவில்லை. கண்கள் பனித்துக் குரல் கம்மியது. வேல் விழி ஜுவலர்ஸ் என்ற அவரின் நகைக் கடையில் இருந்து அவர் வீடு 'பழமுதிர்ச்சோலை' முக்கால் மைல் தொலைவில் இருந்தது. தினமும் காலையில் பஸ்ஸிலோ, சைக்கிளிலோ அவர் வீட்டுக்கு வந்து விடுவேன். பின் இருவருமாய் காரில் எட்டுமணிக்கெல்லாம் கடைக்குச் சென்று விடுவோம். கடையை மருவினுற் போல் இருக்கும் தொழிலகத்தில் நல்லையாப் பத்தரும் சில வேளைகளில் வேலை செய்வார். என்னுடைய வேலை கடையைக் கண்காணிப்பதுடன், கணக்குப்பதிதல். ரசீது போடுதல் என்பன மட்டும் தான். வேணுகோபால் அவர்களின் மனைவியும் அவரைப் போலத்தான் அன். பின் உருவான பல்கலைக் கழகங்கள்! ''அப்பர், அப்பர்'' என்று என்னை அழைக்கும் போது சொந்த மகனைப் போன்ற ஒரு பாசம் தொனிக்கும். தினமும் காலையில் அவர்கள் வீட்டில் சூடான பாற்கோப்பி கிடைக்கும். சில நாட்களில் நெய்த் தோசை, இட்லி என்று ஏதாவது ஆக்கினுலோ அந்த அம்மா என்னைச் சாப்பிடாமல் கிளம்ப விடவே மாட்டாள்.

அவர்கள் தாய் நாடான இந்தியாவில் ஒரே மகளைத் திருமணம் செய்து கொடுத்திருந்தார்கள். அவர்கள் குடும்பமாக எப் போதாவது வந்து போவார்கள். என்னைக் கூட ஒரு தரம் இந்தியாவக்கு வந்து போனுல் என்னவென்று வற்புறுத்துவார்கள். காந்திய நெறிகளில் அவருக்கு அளவு கடந்த ஈடுபாடு உண்டு. கபடமில்லாமல் எதையுமே வெளிப்படையாகப் பேசும் அவருடைய பேச்சுச் சிலருக்குக் குத்தலாகவும் அமையும். எனது வற்புறுத்தலுக்காகச் ''சவரன்'' பதக்கங்களைஇறக்குமதி செய்ய அரசாங்கத்திடம் உத்தரவு பெற்று வியாபாரம் செய்ததின் பேரில் ஆண்டொன்றுக்கு நிகர இலாபம் நாற்பதினுயிரம் ரூபா சம்பாதித்தார் என்று சொன்ஞர். ஒரு நாள் அவர் என்னை அருகில் அழைத்துத் தனது மகள் விரும்புவதாலும், உறவினர்கள் வேண்டி அடிக்கடி அழைப்பதாலும் தான் தனது கடைசிக் காலத்தை இந்தியாவிலேயே கழிக்க விரும்புவதாகச் சொன்ஞர். அதிர்ந்து போனேன்.

''நான் சிலோனிலே பழகிய மனிதருள்ளே உன்னைப்போல விசுவாசமுள்ள ஒருவனை நான் சந்திக்கவேயில்லையப்பா, மனச்சாட்சி தான பெரிய நீதிபதி, அதன் முன்னிலையிலே நாம் தவறேதும் செய்திட்டா அதன் அரிப்பைத் தாங்கவே முடியாது'' அவர் ஏதேதோ முன்பின் சம்பந்தமில்லாமல் பேசுவது போல் இருந்தது. அவர் தொடர்ந்தார்.'' ''சின்னப்பிள்ளையான உன்னுடைய பேச்சைக் கேட்டு ''சவரன்'' வியாபாரம் செய்தேன். அதனுலே நான் சம்பாதிச்சதெல்லாம் உனக்கே தான். சொந்தம், உனக்கே தந்திடறேன் என்ருர். எனக்கு உடலில் மின்சாரம் பாய்ந்தது. உலகமே சுழன்றது. மேசையில் உடலைத் தாங்கிக் கொண்டேன். ''ஆமா கடையையும் அதில் உள்ள நூற்றைம்பது பவுண்நகைகளையும் உனக்கே தருகிறேன். காரும், பழமுதிர்ச்சோலையும் உனது விசுவாசத்திற்குஎனது பரிசுகள், நாளைக்கே வக்கீலை வரச் சொல்லியிருக்கிறேன்''. என்ருர். எவ்வளவு கடமைப் பட்டுவிட்டேன், என்னையேன் இன்னும் கடமைப்பட வைக்கிறீர்கள்? மனித உருவில் வந்த தெய்வமே! ''என அவர் காலைப் பற்றி நாக் குளறக் கேட்டேன் ''என்னுடைய ஆறு இலட்ச ரூபா சொத்திலே ஐந்து லட்ச ரூபாயைத் தான் அரசாங்கம் நான் எடுத்துச்செல்ல அனுமதிக்கிறது, மீதி

யைக் கொண்டு செல்ல முடியல்லேங்கிறதுக்காக அதைக் கொண்டு இங்குள்ள ஏழைகள் எல்லாத்திற்கும் சோறு போடுறதானால் பத்து நாளுக்குத் தான் முடியும், அதனாலே அவன் பசி ஒண்ணும் தீர்ந்திடப்போறதில்லே. ஆனால் ஒருத்தனுக்கெண்ணே கொடுத்திட்டா அவன் குடும்பம்ஆயுளுக்கும் பசியில்லாமல்இருக்கும், அவ்வளவு தான்!.'' என்றார். என்னால் மேலே பேச முடியவில்லை. நான் காண்பது கனவல்லவே, என்னை நான் கிள்ளிப்பார்த்துக் கொண்டேன். தண்ணீர்பட்ட கண்ணாடியினூடு பார்ப்பது போல உருவங்கள் எல்லாம் மங்கலாய்த் தெரிந்தன. இந்த நூற்றாண்டிலும் இப்படி ஒரு மனிதரா.

ஆம் நான் இப்போ ''வேல்விழி ஜவலேர்ஸ்'' உரிமையாளர். அவர்களுடைய இந்தியப் பயணப் பிரியாவிடையின் போது எல்லோருமே சேர்ந்து புகைப்படம் எடுத்துக கொண்டதுடன் வாய்விட்டு கதறி விட்டோம். அந்த கண்ணீர்த் துளிகளைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்ய முடியும்? நல்லையாப்பத்தரை மாமா இப்போது சம்பந்தம் கேட்டுவிட்டிருக்கிறார். ''நீ வேணுமெண்டால் ஜானகிக்கு ஜெயராமனை மாறியும் செய்யலாம், உலகத்திலே மனிதரெல்லாம் தம் ஆயுளுக்கும் முன்னேறி விடணும், என்கிற வேகத்திலே தான் சமயத்திலே தப்பு-வஞ்சனை-இகழ்ச்சி ஏன் ஆராதனை பண்றதுகூட. தவறுவது மனித இயல்பு. மன்னிப்பது தான் மனித தெய்வ குணம். மனிதர் எல்லாமே பலவீனம் என்பது இல்லாமல் ரமணராகவும், விவேகானந்தராகவும் மாறிட்டா உலகமே வெறிச்சோடி விடாதா? தப்பு-தவறு என்று இருக்கிறதாலேதான் தர்மத்தைப் பற்றிய பேச்சு, இதைப்புரிஞ்சு ஏதோ நல்ல முடிவுக்குவா!'' மீண்டும் மீண்டும் மன அரங்கில் நல்லையாப்பத்தரின் வாசகங்கள் ஒலிக்கின்றன.

மாமா குடும்பத்திற்கு ஜானகி கொழும்பில் குடும்பம் நடத்துவார் என்ற நம்பிக்கையும், ராஜிக்கு நான் பொருத்தமானவன் தான் என்ற நினைப்பும், புதிய உறவும், கௌரவமும் எப்படி வந்தது? மணம், பணம் சொந்தங்கள் துளிர் விடக் கூடப் பணந்தான் பசளையாகவேண்டும். இது தான் வாழ்க்கை. அது என்னை வாங்குகிறதா, அல்லது நான் அவர்களை வாங்குகிறேனா, அல்லது எல்லோரையும் அது வாங்குகிறதா புரியவில்லை. என் சிந்தனை குழம்புகிறது. கயிற்றுக் கட்டிலில் சாய்ந்து படுத்துக் கொள்கிறேன்!.

எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துக்கள் !

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு

சிறந்த ஸ்தாபனம்


# கௌரி தங்க மாளிகை

கண்டி வீதி, சாவகச்சேரி.

உரிமையாளர் : சி. ஆர். தர்மதுரை

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

*Space Donated By :*



# Jeya Winding Works

54, Clock Tower Road,

JAFFNA.

*Space Donated By*

# Full Bright Youth Club

Neervely Junction,

NEERVELY.

# கடந்தகால கரபந்தாட்டச் சம்பியன் தெரிவுகள்

| | ஓவர் கேம் | செற் அப் |
|---|---|---|
| 1970 | நீர்வேலி ஐ. வி. க. | யாழ்ப்பாணம் பொலிஸ் வி. க. |
| 1971 | இமையாணன் இளைஞர் வி. க. | வல்வெட்டித்துறை புளூஸ் வி. க. |
| 1972 | அல்வாய் யூனியன் வி. க. | வல்வெட்டித்துறை புளூஸ் வி. க. |
| 1973 | தவிர்க்க முடியாத காரணத்தினால் போட்டிகள் நடைபெறவில்லை. | |
| 1074 | A பிரிவு இமையாணன் இளைஞர் வி. க.<br>B பிரிவு நீர்வேலி ஐ. வி. க. | ஆவரங்கால் நியூகிளியர் வி. க. |
| 1975 | A பிரிவு இமையாணன் இளைஞர் வி. க.<br>B பிரிவு சிவகுமரன் வி. க. உடுப்பிட்டி | யாழ்ப்பாணம் பொலிஸ் வி. க. |

## மாட்டுவண்டில் சவாரிப் போட்டி 1975

A பிரிவு

1. த. தங்கராசா மாவிட்டபுரம்
2. பொ. சக்திவடிவேல் சங்குவேலி
3. மு. கணபதி நீர்வேலி
4. கு. செல்லர் கைதடி

B பிரிவு

1. S. விக்கினேஸ்வரன் புன்னாலைக்கட்டுவன்
2. N. சிவகுமாரன் கட்டுடை
3. வெ. பொன்னுத்துரை கோப்பாய்
4. சி. ஆறுமுகம் நீர்வேலி

## 35 மைல் தூர சைக்கிளோட்டப் போட்டி 1975

1. A. G. கொன்சன்ரைன் 1ம் குறுக்குத் தெரு, குருநகர்
2. ஐ. செல்வராசா சுன்னாகம்
3. N. தேவகுமார் அரியாலை
4. S. தங்கராசா பாஷையூர்

## 5 மைல் தூர பெண்கள் சைக்கிளோட்டம் 1975

1. N. T. கனகேஸ்வரி வல்வெட்டித்துறை
2. K. யோகராணி உடுவில் தெற்கு, மானிப்பாய்
3. K. சுபேந்திராணி அச்செழு, நீர்வேலி
4. K. கருணாதேவி அரசடி வீதி, யாழ்ப்பாணம்
5. S. பரமேஸ்வரி அராலி, வட்டுக்கோட்டை

## A பிரிவு 10 மைல் தூர மரதன் ஓட்டப் போட்டி 1975

1. இ. திருநாவுக்கரசு பண்டத்தரிப்பு
2. நா. கணேசலிங்கம் அளவெட்டி
3. பி. பத்திநாதன் பண்டத்தரிப்பு
4. ப. திருநாவுக்கரசு ஆவரங்கால்
5. வ. திருவாதவூரர் தெல்லிப்பளை

## B பிரிவு 10 மைல் தூர ஓட்டப் போட்டி 1975

1. த. செல்வராசா சிறுப்பிட்டி
2. இ. தயாகரன் மாசுவன், நீர்வேலி
3. ஜே. தர்மரத்தினம் நீர்வேலி
4. சி. ஜெயநாதன் அச்செழு, நீர்வேலி
5. வி. ஸ்ரீரஞ்சன் நீர்வேலி

# நன்றிகள்



- ✲ வெள்ளி விழா மலருக்கு வாழ்த்துச் செய்திகள், வாழ்த்துப் பாக்கள், கட்டுரை, கவிதை, சிறுகதை முதலியன தந்து மலரைச் சிறப்பித்த அறிஞர்கள் அனைவர்க்கும்,
- ✲ மலருக்கு விளம்பரங்கள் தந்து தமது ஆதரவைத் தெரிவித்து எமது முயற்சிக்கு ஊக்கமளித்த வர்த்தகர்கள், ஸ்தாபனங்கள் அனைவருக்கும்,
- ✲ வெள்ளி விழாவை முன்னிட்டு மாதக்கணக்கான அலங்கார ஏற்பாடுகளையும், விளம்பர ஏற்பாடுகளையும் செய்து உதவியவர்களுக்கும், சகல விளையாட்டு, கலைப் போட்டி, மாட்டுவண்டில் சவாரிப் போட்டி, கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி, அலங்கார பவனி, விநோத உடை மற்றும் போட்டிகளில் பங்குபற்றியும், உதவி செய்தவர்களுக்கும்; மேற்படி போட்டிகளில் பங்குபற்றிய கழகங்களுக்கும்.
- ✲ பொருட்காட்சியில் கலந்து சிறப்பித்த அரசாங்க திணைக்களங்களுக்கும், தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும், கலை, கைப்பணி, மாதர் சங்கங்களுக்கும்,
- ✲ வெள்ளி விழாவின் ஆரம்ப நன்னாள் தொடக்கம் இறுதி நாள் வரைக்கும் நிலைய நிர்வாகிகளுடன் ஒன்றிணைந்து பெரும் பணிபுரிந்த திரு. மு. பூபாலசிங்கம் J. P. அவர்களுக்கும்,
- ✲ வெள்ளி விழா மலரை சிறந்த முறையில் குறைந்த காலவெல்லையில் அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாணம் - நல்லூர் "கண்ணன் அச்சகத்தாருக்கும்",
- ✲ வெள்ளி விழாவிற்கு வாகன வசதிசெய்து தந்த வாகனச் சொந்தக்காரர்களுக்கும்,
- ✲ வெள்ளி விழா நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் விளையாட்டரங்கை தந்துதவிய திரு. மு. கிருஷ்ணபிள்ளை தம்பதிகளுக்கும்,
- ✲ வெள்ளி விழாவின் விளம்பரங்களையும், சான்றிதழ்கள் மற்றும் சிறப்பு வேலைகளைக் காலத்துக்காலம் அச்சிட்டுத் தந்த யாழ்ப்பாணம் - நல்லூர் "திருவள்ளுவர் அச்சகத்தாருக்கும்",
- ✲ வெள்ளி விழா மலரின் புகைப்பட புளொக்குகளையும், படங்களையும் திருப்தியான முறையில் செய்துதந்த யாழ்ப்பாணம் "ஞானம்ஸ் ஸ்ருடியோ" ஸ்தாபனத்தாருக்கும்,
- ✲ பரிசில்கள் தந்தும், பொருளுதவி புரிந்தும், விழாவிற்கு வருகைதந்து சிறப்பித்த பிரமுகர்கள், பொது மக்கள் அனைவருக்கும்,

எமது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**வெள்ளி விழாக் குழுவினர்.**

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்
வெள்ளிவிழா வைபவத்தை
" கலாம் ஹாட்வெயர்ஸ் " ஸ்தாபனத்தார் வாழ்த்துகிறார்கள்.

# KALAM HARDWARES

**104, Stanley Road,**
**JAFFNA.**

**Dealer in: HARDWARE, BRASSWARE**
**& ALL KINDS OF PAINTS.**

MOTOR CAR & FURNITURE ETC.
UPHOXSTERY MATERIALS & HOOD LINING.

இரும்பு, பித்தளை வகைகள்
சகல பெயின்றகள்

மோட்டார் கார் — தளபாடம்
உள்ளலங்கார வகைகள்

# கலாம் ஹாட்வெயர்ஸ்

104. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

Phone : **325** போன் : **325**

எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை
வெள்ளி விழாவிற்கு வழங்குகிறோம்!

சகலவிதமான இரும்புச் சாமான்களுக்கும்
கட்டிடப் பொருள்களுக்கும்
இன்றே விஜயம் செய்யுங்கள்.

★ ஈஸ்வரி ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் ★

**EESWARY HARDWARE STORES**

காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

காமாட்சியம்பாள் சனசமூக நிலைய வெள்ளிவிழாவை
வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறோம்.

துவிச்சக்கரவண்டிச் சொந்தக்காரர்களே!



உங்கள்
துவிச்சக்கரவண்டி பழுதுபட்டு
விட்டனவா?

★ உடனே விஜயம் செய்யுங்கள் ★

# தம்பி சயிக்கிள் வேக்ஸ்

நீர்வேலிச் சந்தி, நீர்வேலி.

உரிமையாளர்: ம. தம்பிஐயா

காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தின்

வெள்ளி விழாவுக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

கண்ணன் அச்சகம்

நல்லூர்,

யாழ்ப்பாணம்.

வெள்ளி விழாக்காணும் நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக
நிலையத்துக்கு எமது நல்வாழ்த்துக்கள் !

# அரிவுமில்

நீர்வேலி

உரிமையாளர் : அ. சுப்பிரமணியம்

நீர்வேலி வடக்கு,

நீர்வேலி.

நீர்வேலி காமாட்சி அம்பாள் சனசமூக நிலையத்தின்
வெள்ளி விழாவிற்கு
எமது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# ராஜி ஆட்ஸ்

விளம்பர போட்ஸ், சினிமா சிலேட்,
லேபல் டிசையின்
மற்றும்
எந்தவிதமான ஓவிய வேலைகளுக்கும்,
தேர்வேலை, கோபுர வேலைகளுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

# ராஜி ஆட்ஸ்

உரிமையாளர் :

இ. கனகராசா

அர்மன் றோட்,
திருநெல்வேலி கிழக்கு, — யாழ்ப்பாணம்.

# நியூரோன் எலெக்றிக்கல்ஸ்

மின்சார உபகரணங்கள் இறக்குமதியாளரும்,
ஒப்பந்தகாரரும்.

பிரதான விற்பனையாளர்கள் :

* மின்சார உபகரணங்கள்
* "சென்றிக்" மின்சார, மண்ணெண்ணை தண்ணீர்ப் பம்புகள்
* எஸ்-லோன் தண்ணீர் பைப்புகளும், உபகரணங்களும்
* எவரெடி பாட்டரிகள்
* றேட் மாஸ்ரர் துவிச்சக்கர வண்டிகள், டிரைம்ப் துவிச்சக்கரவண்டிகள்
* சி. பி. ஈ. பல்புகள்

எல்லாவிதமான ஆடர்களும் உடனுக்குடன்
குறைந்த விலையில் கவனிக்கப்படும்.

விஜயம் செய்யுங்கள்.

## நியூரோன் எலெக்றிக்கல்ஸ்

**141, 143, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி : **7016**

வெள்ளி விழாக்காணும் காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்
எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

## எங்கள் தயாரிப்புகள் எப்படியானவை ?

- ✲ குறைந்த விலையில் சிறந்த பொருள்கள்
- ✲ நாற்பத்தெட்டு ஆண்டுகள் நமது அனுபவம்
- ✲ உள்ளூரில் உங்களுக்கான தயாரிப்புகள்
- ✲ மேலுறைகளுக்கு விதம் விதமான அன்பளிப்புகள்
- ✲ ஆதரவு பெருகுதல் அறப்பணிக்கே உதவும்
- ✲ தரத்தில் குணத்தில் தலைசிறந்த தயாரிப்புகள்
- ✲ மில்க்வைற் தயாரிப்புகள் மேலான தரத்தவை
- ✲ உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி
- ✲ மில்க்வைற் தயாரிப்பை மீண்டும் வாங்குங்கள்
- ✲ எங்கும் கிடைக்கும் எல்லோரும் வாங்குங்கள்

ஆதரவாளருக்கு அன்பு வணக்கம்

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77 யாழ்ப்பாணம்.

தொலைபேசி : **7233** தந்தி : " மில்க்வைற் "

கிளை :

79, மெசென்ஜர் வீதி, கொழும்பு - 12.

தொலைபேசி : **36063**

வெள்ளி விழாக்காணும்
சியம்பாள் சனசமூக நிலையத்திற்கு
எமது வாழ்த்துக்கள்.



# சேவி
# கிளாஸ் அண்ட் மெட்டல் வேக்ஸ்

நீர்வேலி

வடபகுதியில்
தரமான
கண்ணாடிப் பொருட்களை
உற்பத்தி செய்பவர்கள்.




கண்ணன் அச்சகம், நல்லூர்